
# சித்தாந்த சரபம்



ஸ்ரீலஸ்ரீ கணபதிப்பிள்ளை
ஞானப்பிரகாசசிவம்

குரு முதல்வர்

இலங்கை மெய்கண்டார் ஆதீனம் - 2007



உ

சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. - திருமந்திரம் -

## தேவாரம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணமறுமே
- திருஞானசம்பந்தர் -

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுமுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல் சூழ்நாகை மன்னுகாரோணத்தானை
நினைவுமா வல்லீராகில் உய்யலா நெஞ்சினீரே.
- திருநாவுக்கரசர் -

நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னை
பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகாவருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனெனலாமே
- சுந்தரமூர்த்தி சுவாமிகள்-

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினன் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. -மாணிக்கவாசகர்-

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிர
வென்கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
அறநாலைப் புகழ்வோனே அவினாசிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ

சிவமயம்

# திருக்கைலாய பரம்பரை
# மெய்கண்டார் ஆதீனம்
# இலங்கை



மெய்கண்ட தேவ நாயனார்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**விநாயகர் வணக்கம். முதல் வணக்கம்**

இது சைவசமய மரபு. நாமும் வணங்குவோமாக.

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே

*- திருஞானசம்பந்தசுவாமிகள்*

கல்ஆல் நிழல் மலை வில்லார் அருளிய
பொல்லார் இணை மலர் நல்லார் புனைவரே

*- மெய்கண்ட தேவ நாயனார்*

நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்

*- உமாபதி சிவாசாரிய சுவாமிகள்*

திருமேவு ஈழவள நாட்டிற் சைவம்
சிறந்தோங்கச் சித்தாந்த மரபு வாழப்
பெருமேரு வென்ன நல்ல சேவை செய்யும்
பித்தரான பக்தர்கள் பெருகி வாழக்
கருமேவிப் பிறவாமை கடனாய்க் கொண்டே
கருதரிய சிவானந்தப் பேறு கொள்ள
ஒருகோட்டன் இருசெவியனான பறாளை
ஒளிதிகழும் விநாயகனை வணங்கி வாழ்வாம்

*- ஞானப்பிரகாசசிவம்*

**எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

# ஞான நல் அறிவினர் பித்தர் என
# உலகவர் பகர்வர்!

பித்தன் என்று எனை உலகவர் பகர்வதோர் காரணம் இது கேளீர்
ஒத்துச் சென்று தன் திருவருள் கூடிடும் உபாயமது அறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற்கு ஒருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே

*- திருவாசகம்*

அன்புடன் நோக்கி நிற்பர் அழுவர்கை தொழுவர் வீழ்வர்
இன்புற எழுவர் பின்பால் ஏகுவர் இரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணார் ஞானநல் அறிவே கொண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தம் கொள்கை யானார்

*- திருவாதவூரடிகள் புராணம்*

ஞாலமதில் ஞானநிட்டை உடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவது ஒன்றில்லை
சீலமிலை தவம்இல்லை விரதமொடுஆச் சிரமச்
செயல் இல்லை தியானம்இலை சித்தமலம்இல்லை
கோலம்இலை புலன்இல்லை கரணம் இல்லை
குணம்இலை குறிஇல்லை குலமும்இல்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினொடு ஆடலிவை பயின்றிடினும் பயில்வர்

*- சிவஞானசித்தியார்*

உள்ளம் சிவமயமானால் உலகம் சிவமயமே
சர்வம் சிவமயம். ஒரு பொல்லாப்புமில்லை

**இவ்வண்ணம்**
*ஞானப்பிரகாச சிவம்*

நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே

உ
சிவமயம்

# யாழ்பாணத்து நல்லூர்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்



## சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பெருமான்

# சிவகவசம்

பங்கயத் தவிசின் மேவி
　　இருந்துடல் பற்று நீக்கி
அங்குநற் பூத சுத்தி
　　அடைவுடன் செய்த பின்னர்க்
கங்கையைத் தரித்த சென்னிக்
　　கற்பக தருவைச் செம்பொற்
கொங்கைவெற் பனைய பச்சைக்
　　கொடியோடும் உளத்தில் வைத்தே. 1

அகிலநா யகனாய் ஞான
　　ஆனந்த ரூபி யாகித்
துகன் தரும் அணுவாய் வெற்பின்
　　தோற்றமாம் உயிரை எல்லாம்
தகவுடன் அவனி யாகித்
　　தரிப்பவன் எம்மை இந்த
மகிதலம் அதனில் தீமை
　　மருவிடா தருளில் காக்க. 2

குரைபுனல் உருவங் கொண்டு
　　கூழ்தொறும் பயன்கள் நல்கித்
தரையிடை உயிர்கள் யாவும்
　　தளர்ந்திடா வண்ணங் காப்போன்
நிரைநிரை முகில்கள் ஈண்டி
　　நெடுவரை முகட்டில் பெய்யும்
விரைபுனல் அதனுள் வீழ்ந்து
　　விளிந்திடா தெம்மைக் காக்க. 3

கடையுகம் தன்னில் எல்லா
　　உலகமும் கடவுட் டீயால்
நடலைசெய் தமலைதாளம் அதைதர
　　நடிக்கும் ஈசன்
இடைநெறி வளை தாபத்தில்
　　எறிதரு சூறைக் காற்றில்
தடைபடா தெம்மை இந்தத்
　　தடங்கடல் உலகில் காக்க. 4

தூயகண் மூன்றி னோடு
சுடரும்பொன் வதனம் நான்கும்
பாயுமான் மழுவினோடு பகர்வர
தாப யங்கள்
மேயதிண் புயங்கள் நான்கும்
மிளிரும்மின் அனைய தேசும்
ஆயதற் புருடன் எம்மைக்
குணதிசை அதனில் காக்க. 5

மான்மழு சூலம் தோட்டி
வனைதரும் அக்க மாலை
கூன்மலி அங்குசந்தீத் தமருகம்
கொண்ட கொள்கை
நான்முகம் முக்கண்நீல நள்ளிருள்
வருணங் கொண்டே
ஆன் வரும் அகோர மூர்த்தி
தென்திசை அதனில் காக்க. 6

திவண்மறி அக்கமாலை செங்கையோர்
இரண்டும் தாங்க
அவிர்தரும் இரண்டு செங்கை
வரதத்தோ டபயந் தாங்கக்
கவினிறை வதனம் நான்கும்
கண்ணொரு மூன்றுங் காட்டும்
தவனமா மேனிச் சத்தியோ
சாதனமேல் திசையில் காக்க 7

கறைகெழு மழுவும் மானும்
அபயமுங் கண்ணின் நாமம்
அறைதரு தொடையுஞ் செய்ய
அங்கைகள் நான்கும் ஏந்திப்
பொறைகொள் நான் முகத்து
முக்கட் பொன்னிற மேனியோடு
மறைபுகழ் வாம தேவன்
வடதிசை அதனில் காக்க. 8

அங்குசம் கபாலம் சூலம்
அணிவார தாப யங்கள்

சங்குமான் பாசம் அக்கம்
தமருகம் கரங்கள் ஏந்தித்
திங்களில் தவள மேனி
திருமுகம் ஐந்தும் பெற்ற
எங்கள் ஈசான தேவன்
இருவிசும் பெங்குங் காக்க 9

சந்திர மௌலி சென்னி
தனிநுதல் கண்ண னெற்றி
மைந்துறு பகன்கண் தொட்டோன்
வரிவிழி அகிலநாதன்
கொந்துணர் நாசி வேதம்
கூறுவேன் செவிக பாலி
அந்தில்செங் கபோலந் தூய
ஐம்முகன் வதனம் முற்றும். 10

வளமறை பயிலு நாவன்
நாமணி நீல கண்டன்
களமடு பினாக பாணி
கையிணை தரும வாகு
கிளர்புயம் தக்கன் யாகம்
கெடுத்தவன் மார்பு தூய
ஒளிதரு மேரு வில்லி
உதரமன் மதனைக் காய்ந்தோன். 11

இடைஇப் முகத்தோன் தாதை
உந்திநம் ஈசன் மன்னும்
புடைவார் அரைகு பேர
மித்திரன் பொருவில் வாமம்
படர்சக தீசன் சானு
பாய்தரும் இடப கேது
மிடைதரு கணைக்கால் எந்தை
விமலன்செம்பாதம் காக்க. 12

வருபகல் முதல்யா மத்து
மகேசன்பின் இரண்டாம் யாமம்
பொருவறு வாம தேவன்
புகன்றிடு மூன்றாம் யாமம்

செருமலி மழுவாள் அங்கை
திரியம்பகன் நாலாம் யாமம்
பெருவலி இடப ஊர்தி
பிணியற இனிது காக்க. 13

கங்குலின் முதல்யா மத்துக்
கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய இரண்டாம் யாமம்
சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றாம் யாமம்
புரிசடை அண்ணல் காக்க
பங்கமில் நாலாம் யாமம்
கௌதரிதன் பதியே காக்க. 14

அனைத்துள காலம் எல்லாம்
அந்தகற் கடிந்தோ னுள்ளும்
தனிப்பெரு முதலாய் நின்ற
சங்கரன் புறமுந் தாணு
வனப்புறு நடுவுந் தூய
பசுபதி மற்றும் எங்கும்
நினைத்திடற் கரிய நோன்மைச்
சதாசிவ நிமலன் காக்க. 15

நிற்புழிப் புவன நாதன்
ஏகுழி நிமல மேனிப்
பொற்பிரமன் ஆகி நாதன்
இருப்புழிப் பொருவி லாக
அற்புத வேத வேத்தியன்
அருந்துயில் கொள்ளும் ஆங்கண்
தற்புர சிவன்வ ழிக்குச்
சாமன ருத்திரன் காக்க. 16

மலைமுதல் துருக்கம் தம்மில்
புராரிகாத் திடுக மன்னும்
சிலைவலி வேட ரூபன்
செறிந்தகா னகத்தில் காக்க
கொலையமர் கற்பத் தண்ட

கோடிகள் குலுங்க நக்குப்
பலபடி நடிக்கும் வீர
பத்திரன் முழுதுங் காக்க. 17

பல்லுளைப் புரவித் திண்தேர்
படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு
மிடைந்திடும் எண்ணில் கோடி
கொல்லியன் மாலை வைவேல்
குறுகலர் குறுகுங் காலை
வல்லியோர் பங்கண் செங்கை
மழுப்படை துணித்துக் காக்க. 18

தத்துநீர்ப் புணரி ஆடைத்
தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தன்
பஃறலை அனைத்துந் தேய்ந்து
முத்தலை படைத்த தொக்கும்
முரிவெங் கனல்கொள் சூலம்
பொய்த்தொழில் கள்வர் தம்மைப்
பொருதழித் தினிது காக்க. 19

மூடங்குகளை முதலாய் உள்ள
முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பினாகங் கொல்க
என்றிவை அனைத்தும் உள்ளம்
திடம்பட நினைந்து பாவம்
செயும்சிவ கவசம் தன்னை
உடன்படத் தரிப்பை யானால்
உலம்பொரு குவ வுத்தோளாய். 20

**வேறு**

பஞ்சபா தகங்கள் போம் பகைகள் மாய்ந்திடும்
அஞ்சலில் மறலியும் அஞ்சி ஆட்செயும்
வஞ்சநோய் ஒழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சமென் றிதனை நீ தரித்தல் வேண்டுமால். 21

சிவகவசம் முடிந்தது.

உ

சிவமயம்

# திருக்கைலாய பரம்பரை
# மெய்கண்டார் ஆதீனம்
# இலங்கை



## குருமுதல்வர்
## ஸ்ரீலஸ்ரீ கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாசசிவம்

"வெண்பா"

மின்னார் வியவருடம் மேலேகா. தசிபூர்வ
நன்றோ கிணியிடத்து நல்லுலகே - இன்சைவ
சித்தாந்த சரபம் கலாநிதி கணபதிப்பிள்ளை
முத்திநிலை மன்னுசிவன் நாள்

கவிஞர் கதிர் - சரவணபவன்
வவுனியா

# வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள சுழிபுரத்தில் உயர்சைவ வேளாண்குடியில் கதிர்த்தம்பி சட்டத்தம்பி இராமலிங்கத்தின் மகன் கந்தசாமி பார்வதியின் சைவத் திருமகனாக வித்துவான் கணபதிப்பிள்ளை 19-12-1927ல் பிறந்தார். வள்ளியம்மை இராமலிங்கம் அரும்பொருள் பின் பிறந்த சகோதரர்கள்

ஆரம்பக் கல்வியைச் சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை யில் பெற்றார். பெரிய தந்தையாராகிய இந்துப்போட் இராஜரட்ணத்தின் அனுசரணையுடன் 1938 - 1941 க்கு இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் சன்மார்க்க ஆங்கில பாடசாலையிலும் பின் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

1945 - 1947 ல் திருநெல்வேலிச் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1957 - 1959ம் ஆண்டுகளிற் படித்து வித்துவான் விருதும் பெற்றார். 1960 - 1963 இல் . தாமே சுயமுயற்சி கொண்டு படித்து (B.A ) கலைமானித் தேர்வில் வெற்றி பெற்றார். மதுரை ஆதீனம் சித்தாந்த கலாநிதிப்பட்டமும் நல்லை ஆதீனம் மகாவித்துவான் சித்தாந்த சரபம் என்னும் விருதும் 1972 - 1973 இலே வழங்கின. 1961 இலே சைவப்புலவர் பரீட்சையில் சித்தி பெற்ற இவர் நல்லை ஆதீனத்தில் சித்தாந்த வழிபாடுகள், சமயகுரவர்கள் சந்தானகுரவர், விழாக்கள் நடத்தப் பலவகையிலும் முன்னோடியாய்த் திகழ்பவர் குடும்ப வாழ்க்கையில் மனைவி மக்களோடு வாழ்ந்த இவர் ஆசிரிய சேவையிலிருந்து 19-12-1987 இல் ஓய்வு பெற்று 12-01-1990 முதல் துறவு மார்க்கத்தைக் கடைப்பிடித்தார். 19-12-1991 முதல் மெய்கண்டார் ஆதீன முதல்வராக நியமனம் பெற்று 07-07-1994 முதல் இவர் சீலத்திரு சித்தாந்த சரப சிவம் என்னும் நிலையை அடைந்தார். 27-04-1994 இல் சீருடை பெற்றார். 07-07-1994 முதல் இவர் சீலத்திரு சித்தாந்த சரப ஞானப்பிரகாசசிவம் எனப் போற்றப்படுகின்றார்.

இவர்களின் அருளாட்சி முற்பகுதில் கஸ்தூரியார் வீதி, வண்ணை யாழ்ப்பாணத்திலும் பிற்பகுதி மெய்கண்டதேவர் ஆதீனம் 5 கலைப்புலவர் வீதி, திருவாசக மன்றம், சிறாம்பியடி யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும்.

பறாளை விநாயகர் ஊஞ்சல், கம்பனை அம்மன் ஊஞ்சல், கைதடி முத்துக்குமாரசுவாமி ஊஞ்சல், சுருவில் ஐயனார் ஊஞ்சல், எனப் பல திருத்தல ஊஞ்சல் நூல்கள் பாடியுள்ளார், இவருடைய பறாளை விநாயக ஊஞ்சலில் இருந்து ஒரு பாடல் தருகிறோம்.

மந்திரஞ்சேர் மாகங்கை நீரா வாட்டி
மணியொளிசேர் பனிதநறுஞ் சாந்த மாட்டி
சுந்தரஞ்சேர் பட்டுடுத்துப் பொட்டும் இட்டு,
தூயகலன் பல பூட்டித் தூபம் காட்டிக்
கந்தமலர் நறுந்தொடையல் மாலை சூட்டிக்
காந்தியொளிர் கர்ப்பூர ஒளியுங்காட்டிப்
பந்தமெலாம் விட்டகல அருளைக்கூட்டும்
பறாளையுறை விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

தமிழ் அறிஞர் சரித்திரம் என்னும் (1994) நூலிலே வெளிவந்தது.

அன்னாரின் திருமண வாழ்க்கை நயினாதீவைச் சேர்ந்த கொழும்பில் பிரபல வர்த்தகரும் உயர் வேளாண் குடியில் செல்லர் நல்லதம்பி சொர்ணம்மா தம்பதியின் புதல்வியான தங்கலட்சுமியைத் திருமணம் செய்து வைத்தார்கள்.

இத் தம்பதிகளின் இல்லறப் பயனால் சிவகுமாரன், ரஜனி, சூரியகலா, சிவகலா, குகஸ்ரீ என்னும் புத்திரச் செல்வங்களை பெற்று எடுத்தார்கள். பிள்ளைகளை நல்லபடி வளர்த்து நல்ல கல்வி புகட்டி அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். அவர்களுக்குரிய நல்வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்தார்.

அன்னாரின் ஏகபுத்திரன் சிவகுமாரன் லண்டனில் உயர்கல்வி கற்று பிரபல தொழில் நிறுவனங்கள் வைத்து நடத்துகின்றார். மனைவி உமாஸ்ரீ நிறுவனத்தில் பணிபுரிகின்றார். புத்திரர்கள் லக்சிதா, லக்சாயினி, லக்சனா, லக்சனன், உடன் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள்.

மூத்தமகள் ரஜனி ஆயுள்வேதம் படித்து யாழ் இந்துக் கல்லூரி அதிபர், கணேசராஜாவை திருமணம் செய்து திரிலோசனன் (பல் வைத்தியபீடம் பேராதனை) திவாகரன் (உயர்கல்வி) லிங்கேசன் (உயர்கல்வி) அங்கஜன் என்ற புத்திரர்களுடன் சிறப்பாக இருக்கிறார்கள்.


மகள் சூரியகலா B.A (Diploma)ப் பட்டம் பெற்று பம்பலப்பிட்டி / இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். மஸ்கன் நிறுவனத்தில் பணிபுரியும் நித்தியானந்தன் என்பவரை விவாகம் செய்து பூரணி என்ற புதல்வியுடன் சிறப்பாக இருக்கிறார்கள்

மகள் சிவகலா கனடாவுக்குச் சென்று ஆங்கிலப் படிப்பில் (Diploma) பட்டம் பெற்று தொழில் புரிகிறார். பிரபல தொழில் நிறுவனத்தில் கடமைபுரியும் தவராஜா என்பவரைத் திருமணம் செய்து தர்ஷகா, கிருஷ்ணி என்ற புதல்விகளுடன் சிறப்பாக இருக்கிறார்கள்.

மகள் குகஸ்ரீ லண்டன் குயின் பல்கலைக் கழகத்தில் (பொறியியலாளர்) பட்டம் பெற்று நிறுவனத்தில் கடமையாற்றுகிறார். இந்தியாவிலுள்ள திருச்சிப் பல்கலைக்கழகத்தில் M.S.C பட்டம் பெற்ற ரவிச்சந்திரன் என்பவரைத் திருமணம் செய்து திவாணி என்ற புதல்வியுடன் சிறப்பாக இருக்கிறார்கள்.

இவரின் மைத்துனர், மைத்துனிகள் பின்வருமாறு Dr.கு. சங்கரப்பிள்ளை, (வைத்தியர்) தெய்வானைப்பிள்ளையுடன் Dr. பூலோகசுந்தரம் (வைத்தியர்) திருமதி சிவக்கொழுந்து. இராசா அமரர் வைத்தியர் கு. செல்லத்துரை (இளைப்பாறிய அதிபர்) வைத்தியர் கு. திருச்செல்வம் (முன்னாள் தேயிலைத் தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர்) வர்த்தகர்களான சின்னத்தம்பி, சின்னையா செ.ந. பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற திறைசேரி) செ.ந.நவரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்களம்) செ.ந.துரைராஜசிங்கம் (ஓய்வு பெற்ற கமநலசேவைத் திணைக்களம், திருமதி அன்னலட்சுமி, தனலட்சுமி, பரமேஸ்வரி, ஓங்காரலட்சுமி, ஆகியோர்.

இத்தகைய சிறந்த சிவநெறிச் செம்மல் தன் வாழ்நாள் முழுவதும் சைவத்திற்கும், தமிழிற்கும், பொதுப்பணியிலும், சிவவழிபாட்டிலும் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் வேளையில் 29-01-2007ல் திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் முத்திநிலை அடைந்தார்.




உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**மெய்கண்டார் ஆதீனம்**



3 வது குரு மகாசன்னிதானம்
சித்தாந்த சிவ வித்தகர்
சிவஸ்ரீ சிவக் கொழுந்து சிவதேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
குரு மகா சன்னிதானம்

சிவத்துக்கு மேலாம் தெய்வமில்லை - சைவத்தின் மேல் சமயம் இல்லை

நமசிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!

திருக்கைலாய பரம்பரை மெய்கண்டார் ஆதீன 2ஆம் குருமஹாசந்திதானம் ஸ்ரீலஸ்ரீ கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாச சிவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் சிவம் பிரகாச சாயுச்சிய பரிபூரணநிலை.

## விய வருஷ தை உரோஹிணி

திருக்கைலாய பரம்பரை மெய்கண்டார் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து சிவதேசிய பரமாச்சாரிய சுவாமிகளிடமிருந்து எழுந்தருளும் திருமுகம்.

இலங்கையில் 1972 சித்திரையில் சித்திரை ஓர் அற்புதமானநாள் 1872ல் குருவாக்கிய பரிபாலனம் பேணிய பொன் இராமநாதர்.பொன் அருணாசலம் தன்னுயிர் போல் மன்னுயிரை தென்கிழக்காசியா உட்பட சர்வதேசரீதியாக சைவத்தை, தமிழை, கிரந்தத்தை, முப்பொருளுண்மையை உணர்ந்து பூசித்ததுபோல் இலங்கை வாழ் இந்து, பௌத்தர்கள் உய்தி பெற எண், எழுத்து, மாற்றங்கள் இலட்சணத் (இலக்கணத்) தை காஞ்சி மெய்கண்டார் ஆதீன 229 ஆம் குருமுதல்வர் அறம். பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களை ஒரே பிறவியில் நல்க வல்ல தமிழ் சைவ சித்தாந்தத்தைப் பரப்ப இலங்கை மெய்கண்டார் ஆதினத்தை ஏற்படுத்தி முதலாம் குருமுதல்வராக தொண்டர் அருளம்பலத்தை தொழிற்பட ஏற்படுத்தினார். அவர் 18 ஆண்டுகள் உயிர்களுய்திபெற உழைத்து 1990 சித்திரை - பரணியில் சிவன் பாதமடைந்தார். அவரது சமாதி கீரிமலையில் உண்டு. வழிபட்டு வருகின்றோம். அன்றிலிருந்து இந்து, சைவத் தமிழ் மக்களுக்கு அனுவளவும் எண், எழுத்து, வழிதவறாது 2007 தை உரோஹி வரை ஆதீனத்தையும், சங்கம சூத்திர அடியார்கள் சமயநெறி தொடர சிவன் திருவருள் வேண்டும். தமிழ், கிரந்தம் எண் ஆக எழுத்தாக அமைந்துள்ளது. எண் (8) என்பதும், எழுத்து (அ) என்பதும், க(I) பிறப்பிறப்பற்றவர். (ஒருவன்) 2 (உ) எண்ணற்ற உயிர்கள் (பசுக்கள் தோன்றி, பிறப் ஒடுங்கும், போக்கு வரவு, 8 குணமுடையவை. (மால், பாசம்) கடவுளால் கட்டுண்டவை. பாசம் கடவுளைக் கட்டாது.

முப் (3) பொருளுண்மைகளை, நாற் (4) பாதங்களை, பஞ்ச (5) ரூபங்களை, ஆறொழுக்க, (6) நெறிகளை தமிழ்கிரந்த உச்சரிப்புகள் பலமொழிகளாகத் திரிபடைந்துள. இதை சிவபெருமான் குருவாக வந்து ஐம்புல வேடர்களால் அலைக்க விடாது வழிகாட்டி .கீழ் (இருள்) உலகத்திற்கு மேல் (ஒளி) உலகத்திற்கு அழைத்துச் செல்வர்.

போக்கு வரவு உயிர்களின் தொழில் பண்பு (உ-2) பாசம் அறிவற்றது. உயிர்களைப் பற்றிப் பிடிக்கும். இன்றைய இலங்கை பாசத்தால் அல்லலுறுகின்றது. சிவஞானம் உண்டாயின் உயிர்கள் பிறவிக்கடலுள் அகப்படாது. ஒளியை (அன்பு, அருள்) ஆசர ஒழுக்கநெறியைத் தொடர்ந்து ஆதீத நிலையிலிருந்து நித்தியானந்தம் அனுபவிக்கும்.

2 ஆம் குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சிவதேசிகர் வேண்டிய போது வேண்டிய வடிவெடுத்து பராமாசாரியாகி, அடியார்க்கு அடியராகி, பரஞ்சோதி முனிவராகி, கச்சியப்ப சிவசாரியாகி, மெய்கண்ட தேவராகி, தாயுமானவராகி, கண்ணப்பராகாது கண்ணப்பர் மாஹேசுரர் பூசையன்று சந்திரன் பிரியங்காட்டிய உரோஹிணியில் சிவசாயுச்சிய நிலையெய்தியமை இந்திரசால வித்தையாயுள்ளமை அனைவரையும் வியப்பில் அமிழ்த்தியமை என்றுமில்லாத அற்புதமாகும். அது அவரது அதீத நிலையாகும். அட்டாங்க யோகம், பஞ்சாங்க யோகம், எண், எழுத்துக்கள், தொழிற்படும் விதங்களின் உபதேசித்துப் பயிற்றுவித்து அறம், பொருள், இன்பம், வீடு, (பசு, பாசம், வீட்டி, சிவம் பதித்து) பேரின்பம் பெறவும் செய்தார்.

பிறப்பிறப்பற்ற சிவபெருமான் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குப் பேரின்பமளிக்கவே குருவாக வந்து ஆட்கொள்வார் என்பது சிவாகம நூற்துணிபு. இமயம், நியமம், ஒழுக்கம் இறைவன் போலாக்கும். என திருமூலர் 8018 ஆண்டுகளுக்கு முன் அருளியது. என்றும் இன்பம் பெருக்கு திருநீறணிந்து சிவத்தியானம் புரிக. சிவஞானசித்தியார் 17 ஆகமத்துணிபுலிருந்து சி.வ. சாத்திர, தோத்திர, ஆகம, பஞ்சாங்கப்படி வாழ்ந்து உய்திபெறுக.
அவன் அவள் அது எனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதிர ஒடுங்கி மலத்து உளதுஆம்
அந்தம் ஆதி என்மன்ஆர் புலவர். சிவஞான போதம்.. 1 ஆம் சூத்திரம்.
சீவன்உம் இச்சா ஞானக் கிரியைஆல் சிவன்ஐ ஒப்பன்
ஆவன் என்று இடில்அ நாதி மலம் இவற்றினைமறைக்கும்?
காவலன் இவன்செய் கன்மத்து உளஅளவினில் கொடுப்பக் காண்பன்:
பாவிஆம் புத்தி முத்திப் பயன்கொள்உம் பண்பில்உ ஆகும். சி.வ.ஞான சித்தியார் 1ஆம்சூத் வேதநூல் சைவநூல் இரண்டு (ஏ) நூல்கள் : வேறுஉரைக்கும் இவற்றின் விரிந்தநூல்கள்: ஆதி நூல் அநாதி அமலன் தரு நூல் இரண்டும் ஆணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூல்ஆம் நீதியினால் உலகர்க்கும்சத்தி நிபாதர்க்கும் நிகழ்த்திய அது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தம்அத் தீதுஇல்பொருள் கொண்டு உரைக்கும் சைவம், பிறநூல் திகழ் பூர்வம், சிவஆகமங்கள் சித்த அந்தம் ஆகும். சற்குருவழி நின்று சி.வ மயமாகுங்கள் அதே வாழ்வின் இறுதிஇலட்சியம். நோக்கு, இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

சர்வம் சிவமயம்

உ

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை

ஆதீன முதல்வர் -ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

**Nallai Thirugnanasambantar Atheenam**
**NALLUR, JAFFNA - SRILANKA**

---

அஞ்சலிச்செய்தி

திரு கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு அனைவருக்கும் வேதனை யைத் தந்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி பல நன் மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். சமயப்பற்றும், மொழிப்பற்றும் நிறைவாகக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கொள்கைகளை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்பதில் வினயமாக செயற்பட்டவர். ஆதீனம் நடாத்திய சைவ சித்தாந்த வகுப்பைப் பொறுப்பேற்று பல சித்தாந்த அறிஞர்களை உருவாக்கியவர். இதனை அடிப்படையாகக் கொண்டு ஆதீன உயர்பட்டமாகிய "சைவசித்தாந்த சரபம்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். ஓய்வு காலங்களின் சமய சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு பிழையானவற்றை சுட்டிக்காட்டி அனைவரும் ஆன்மீக பாதையில் செல்ல வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர். இவருடைய மறைவு அனைவருக்கும் வேதனையைத் தந்துள்ளது. பண்டிதர் திரு. கணபதிப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம் இலங்கை

அலுவலகம் 2362
இல்லம்

டாக்டர் மா. வேதநாதன்
பி.ஏ. (ஆனர்சு) டி.ஏ.எம்.ஏ.பிஎச்டி
தலைவர்
இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## சைவ உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

சைவத்தையும் அதன் தத்துவஞானமாகிய சைவசித்தாந்தத்தையும் வளர்த்தற் பொருட்டு அர்ப்பணிப்புடன் அயராது உழைத்த சைவத்தமிழ்ப் பெருமகன் சித்தாந்த சரபம் சிவத்திரு க. கணபதிப்பிள்ளை, பி.ஏ., அமரத்துவம் அடைந்துவிட்டார் என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்ததும் ஆழ்ந்த துயரம் அடைந்தேன். பல்லாண்டுகள் அவரோடு பழகியிருந்தபோதும், சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் இரண்டு மணித்தியாலம்வரை கொழும்பில் அவருடன் கலந்துரையாடக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. தான் உயிரோடு இருக்கும் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் "சைவசித்தாந்தம்" எனும் பெயரில் ஒருதுறை உதயமாகவில்லை என்று கண்ணீர் விட்டார். அவரது எண்ணத்திற்கு உரமூட்டுவது போல யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் அலகின் பெறுவதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிவனடியே சிந்திக்கும் சைவசித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை "சிவனை ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை. அவனை ஒப்பார் இங்கு யாருமில்லை" என்ற உயரிய உளப்பாங்கோடு சித்தாந்த சைவ வாழ்வியலை வாழ்ந்துகாட்டியவர். அவரது நெடிதுயர்ந்த பொன்னார்மேனி, அவர் தரித்திருக்கும் தூய வெண்ணிற ஆடை, அவரது நெற்றியில் துலங்கும் மூன்று திருநீற்றுக்குறி, கழுத்தில் அணிந்திருக்கும் உருத்திராட்சமாலை என்பன அவரது சைவ இலட்சிய வாழ்வின் அடையாளங்களாக விளங்கின.

இலங்கையில் இருபதாம் நூற்றாண்டில் சைவசித்தாந்த மெய்யியலை நாவலரின் வழித்தடத்தில் நின்று வளர்த்தெடுத்தவருள் இவர் தனிச் சிறப்புடையவர். மெய்கண்டார் ஆதீன முதல்வராக விளங்கி அவர் ஆற்றிய பணிகள் பலவாகும். சிவனை வணங்காதார் எவரோடும் அவர் என்றும் உறவு வைத்துக் கொள்வதில்லை. அவர் தமிழ் நாட்டுக்குத் திருத்தல யாத்திரை செய்தபோது சிவாலயங்களை மட்டுமே வழிபட்ட பெருமைக்குரியவர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு ஆதீனமாகிய நல்லை திருஞானசம்பந்தா் ஆதீனத்தில் பல ஆண்டுகள் ஆதீனமகாவித்துவானாக இருந்து சைவசித்தாந்த வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகள் தனிச்சிறப்புடையவை. சைவ சித்தாந்தத்தை மேன்மேலும் பரப்புரை செய்யும் இலட்சியத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஸ்ரீபரமேஸ்ரன் ஆலயத்தில் சைவசித்தாந்த சாத்தரங்களை மாணவர்களுக்கு போதித்த சைவச் சால்புடையவர்.

சிவஞான முனிவரின் சிவஞானபோதச் சிற்றுரையும், பேருரையும் இவரின் உள்ளம் கவர்ந்த சைவசித்தாந்த நூல்களாகும். சைவத் திருமுறைகளுக்கு ஏற்றம் கொடுக்க வேண்டுமென்பதே இவரின் இலட்சியமாக விளங்கியது. தலைசிறந்த சைவசமயச் சொற்பொழிவாளர். தர்க்கம் செய்வதில் வல்லவர். கவிதை இயற்றுவதில் வித்தகர். சைவசமத்திற்கு மாறான எக்கோட்பாட்டினையும் உடனே கண்டிக்கும் ஆற்றலும் மன உறுதியுமுடையவர்.

அமரர் க. கணபதிப்பிள்ளை நல்லாசிரியராகப் பணிபுரிந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவரது மருகர் தற்போது அதிபராக விளங்குவதும், அவரது மகன் லண்டன் மாநகரில் புகழோடு வாழ்வதும் அவர் வாழும்போதே பெற்ற பெரும் பேறாகும்.

இலங்கையில் ஓர் இல்லற ஞானியாகவும், மெய்கண்டார் ஆதீன முதல்வராகவும் விளங்கிய சைவசித்தாந்த சரபம் க.கணபதிப்பிள்ளையின் மறைவு சைவ உலகிற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

* * * * * * * * * *

# JAFFNA HINDU COLLEGE

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் (இலங்கை) Jaffna (Sri Lanka)

Tel. No: 021.2222431
Fax,No : 0212222431
F.mail:principal@Jaffnahindu.org
web page: www.jaffnahindu.org

Principal
**V.Ganesarajah**
B.Com.Dip. in Ed., SLPS I

Deputy Principal
**P.Maheswaran**
B.Sc.(Hons)., Dip.in Ed

15.02.2007

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபரின் செய்தி

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"

என்ற பாரதியாரின் பாடலுக்கு அமைய வாழ்ந்தவர் சித்தாந்த சரபம் கலாநிதி க.கணபதிப்பிள்ளை B.A அவர்கள் ஆவார்.

ஒரு சமூகத்தின் நிலையான சொத்து கல்விச் செல்வமாகும். புகழ்பூத்த யாழ் இந்துக்கல்லூரியின் மரபுக்கு அமைய சைவத்தையும் தமிழையும் மாணவர்கள் மத்தியிலும் நகைச் சுவையுடன் கற்பித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர் இவ்வாசிரியாரவார்.

இன்று இலங்கையில் உள்ள பிரபல பேச்சாளர்களையும், சைவசமய சொற்பொழிவாளர்களையும், பேராசிரியர்களையும் உருவாக்கியவர் கலாநிதி க. கணபதிப்பிள்ளையாவாார். இவரின் சேவை கல்லூரிக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் பெருமையளித்தது எனலாம்.

தமிழ் சைவப்பாரம்பரிய மக்களுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டிய இவ் பெரியார் 29.01.2007 இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரிச் சமூகத்தின் சார்பாக கல்லூரியின் ஞானவைரவப் பெருமானின் அருளாசி வேண்டி நிற்கின்றேன்.

**வீ. கணேசராசா**
அதிபர்
யாழ் இந்துக்கல்லூரி

சிவமயம்

# ஞானப்பிரகாசசிவம்

## குரு முதல்வர்

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
அமைபவன் நூலுரை ஆசிரிய னன்றே.

என எடுத்துரைக்கின்றது. நன்னூலார் பாடல் ஆசிரிய இலக்கணத்திற்கு அமைவாக வாழ்ந்து சி.வ அடியார்க்கு அடியன் என்னும் பிறழா நெறிவழி ஒழுகி, அகில இலங்கை மெய்கண்டார். ஆதீன குருமுதல்வர் ஞானப்பிரகாசசிவம் என்னும் உயர்நிலையில் வழுவாது கருமமாற்றி திருக்கைலாய பரம்பரையின் வாரிசுகளை வழிவழிமரபு சேர்த்து, சைவப் பாதுகாப்பு சமய சமரச சேவை மெய்கண்டார் நிறுவனத்தின் மூலம் சமய சீர்திருத்த கண்டனங்களையும், சைவ சமயத்தின் பெருமையையும் அகில உலகத்திற்குமாக எடுத்துக் காட்டி உயர்நெறி நின்றவர் எனது வணக்கத்திற்குரிய குருமுதல்வர் வித்துவான் கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

குருவருளைப் பெறுவதும் திருவருளைப் பெறுவதும் அவரவர்க்குரிய விதிப்பலன் குருவருள் கூடும்போது திருவருள் கைகூடும். மேற்கூறிய நன்னூலாரின் பாடலுக்கமைவாக அத்தனை குணாம்சங்களும் பொருந்திய நல்லாசிரியனாகத் திகழ்ந்தவர் வணக்கத்திற்குரிய ஞானப்பிரகாசம் குருமுதல்வர் அவர்கள். அத்தகைய குருமகானிடத்து சித்தாந்தத்தைக் கற்கும் பேற்றினைப் பெற்றவன் அடியேன். கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்கள் பற்றற்ற வாழ்விற் கிலக்கணம் வகுத்த நிலையில் சித்தாந்த சரபம் எனும் நாமத்தோடு "ஞானபூசை" நடத்தி திருக்கைலாய பரம்பரைக்குத் திருவிளக் கேற்றியவர். இதனை அடியேனுடைய நூலான "தெய்வீகமும் சமாதானமும்" வெண்பா மூலம் தெளிவுபடுத்தியுள்ளது.

சைவசித் தாந்த சரபம் கலாநிதி
துய்யவடி யார்க்கடியன் தூயபதம் - செய்யகுணச்
சத்தியருட் கணபதிப் பிள்ளை பொற்பாதம்
சித்திதர வேண்டுகின்றேன் சீர்.

பூசை என்பதன் கருத்து ஆராதனை, அமுது செய்வித்தல் எனப் பல்வேறு கருத்துக்களைத் தரும். ஞான பூசை என்பது ஞான வாள். இறைவன் குருவாக எழுந்தருளி அடியார்களிடத்து மெய்யறிவைத் தந்து மலங்களை வேரோடு களைவதென்பது பொருள். இதனை மணிவாசகர்தம் திருவாசகம் இனிதே எடுத்தியம்புகின்றது.

ஞானவர் ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே

என்பது அப்பாடல். எனவே எம்பொருட்டு ஆட்கொண்டிருந்த மலங்களை வேரோடறுத்து மெய்யறிவின்பால் செலுத்தியவர் எம் வணக்கத்திற் குரிய குருமுதல்வர். இதனை எனது இருபாடல்கள் தெளிவு படுத்துகின்றன.

சிவஞான போதசிவ ஞானசித்தி
சிவாயநம மந்திரத்தின் சிறப்புணர்த்தி
அவனிதனில் ஒருவருட ஞானபூசை
அடியேனின் வேண்டுகோட் கலங்குழைந்து
உலப்புடனே உண்மைசிவ ஞானாமிர்த
உலகசிவ சித்தாந்த வித்தகராய்
புவனியிலே பொறையடக்கம் பண்புதோயப்
புகழ்மரபு செழிக்கவைத்த குருதாள்போற்றி.

செயற்கரிய செய்வனப் பெரியோனென்று
சிந்தையுணர் மக்கள் மிகச் சீருரைக்க
உயர்கரத்தி னொளிவிளங்கப் பாடல்யாவும்
ஒருகையால் எழுதிமிக ஓங்கக்காட்டித்
துயர் போக்கச் சித்தாந்தத் தூய்மையோதி
தெளிவோதல் ஓதுவித்தல் பொருள் கேட்பித்தல்
நியமமுடன் தான்கேட்டல் சித்தித்தலாய்
நிறையறிவு தனைத்தந்த குருதாள் போற்றி.

இப்பாடல்கள் மூலம் குருமுதல்வர் அவர்களின் சைவப் பாதுகாப்புச் சமய சமரச சேவையின் முழுவடிவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சைவ சமயிகளிற் சமய தீட்சை பெறாதோர் சைவசமயத்தர் ஆகார். தீட்சைஎன்பது மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்பது பொருள். அவ்வகையில் சமயம், விஷேசம், நிர்வாணம் என மூவகைத் தீட்சைகள் உள. இம் மூவகையும் சைவ சமயத்திற் புகுதற்காகச் செய்யப்படுவதும், சிவபூசை செய்து சிவயோகம் சாதிப்பதும், ஞான நெறியில் ஒழுகுவதுமாம். இதனை விடக்கிரியை வகையால் எழுவகைத் தீட்சைகள் உள. அவையாவன நயன தீட்சை, பரிச தீட்சை, மானச தீட்சை, யோக தீட்சை, வாசக தீட்சை, ஔத்திரி தீட்சை, சாத்திர தீட்சை என்பனவாம். நயனமென்பது கண்ணினால் நோக்கியும், பரிசம் தொட்டுணர்ந்து ஆசீர்வதித்தும், மானசம் மனத்தினாலேயேயும், யோகம் யோகம் பாவனையால் மாணாக்கனிடத்துச் சிவத்தன்மையையடைவித்தும், வாசகதீட்சை

மந்திரத்தின் மூலம் உபநேசித்தும், ஔத்திரிமும்மலிமுடையராம் ஆன்மாக்களின் மலநீக்கத்திற்காய் சிவன் குருவடிவுகொண்டு ஓமசகிதமாய்த் தீட்சை செய்தும், சாத்திரம் சைவ சமய உண்மைகளையும், சைவ அனுட்டானங்களையும் போதித்தலும் எனக் குருவானவர் மூலம் பெறும் எழுவகைத் தீட்சைகள் பற்றிக் கூறப்படுகின்றன. இவற்றுள் ஞானநெறியில் ஒழுகி சாத்திர தீட்சைமூலம் எவ்வித பயனையுங் கருதாது நன்மாணாக்கர்களை உருவாக்கியவர் எமது வணக்கத்திற்குரிய குருமுதல்வர் ஞானப்பிரகாசம் அவர்கள். இதனை எனது நூலின் ஓர்பாடல் தத்ருபமாக எடுத்தியம்புகின்றது.

பதவியொடு பட்டமுடன் பணமே நோக்கார்
பாரிலெம் மெய்கண்டார்மெய் யடியனென்று
நிதம்பூசை வழிபாட்டின் நெறியுரைப்பார்
நல்லடியார் பத்திநெறித் திருமுறைப்பார்
இதமான புத்திசாத் திரநெறிகள்
இயற்கைவிஞ் ஞானதத் துவநெறிகள்
மிதமான மேல்நூறு ஞானநூல்கள்
மணியுரைப்பார் மகிழ்வுரைக்கு குருதாள் போற்றி

என்பது அப்பாடல், காலத்திற்குக் காலம் சைவப் பெரியார்கள் தோன்றி சைவசத்திற்கும் தமிழிற்கும் தொண்டுகள் புரிந்து மறைந்தமை கண்கூடு. அவ்வழி வந்தோரில் நல்லைநகர் ஆறுமுக நாவலரும், புலோலியூர் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரும், சைவத்தின் பாற்சேவை புரிந்தோருள் அடங்குவர்.

சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவ நிலையாஞ் சைவநெறி சாரார் - அவனிதனில்
கான்பரந்த பச்சைக் கழாநிழலைக் கைதொழார்
ஏன் பிறந்தார் மானிடராய் இன்று

என்பது அதிவீர ராம பாண்டியர் பாடல். இன்றும் எமது சைவர்கள் மத்தியிலே சிவசின்னங்களை மறந்து, சைவ சமயத்தின் புனித த்த்துவக் கோட்பாடுகளை மறந்து வாழ்கின்றமையை வெளிப்படையாகக் காணக்கூடியதாயுள்ளது. அதுமட்டுமன்றி பொருளாசையின் நிமித்தம் வேற்றுச் சமயங்களின் பால் மோகமுற்று மதமாற்றமடைவதையும் காண்கின்றோம். இவற்றுக் கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாற் போல காலத்திற்குக் காலம் அவதார புருஷர்கள் தோன்றுவது மரபு. அவ்வழி வந்தோரில் ஒருவரே குருமுதல்வர் ஞானப்பிரகாசம் எனும் அடியார்க்கு அடியன்.

இவர்தம் பெற்றோர் பெயர் கந்தசாமி பார்வதி. பிறப்பிடம் யாழ்ப்பாணம் சுழிபுரம். வாழ்விடம் வண்ணார்பண்ணை. 1927-12-19ந் திகதியில் பிறந்தார்.

பிரமச்சரிய வாழ்வைச் செவ்வனே சுகித்து, சைவப்புலவராய், சித்தாந்த கலாநிதியாய் கணபதிப்பிள்ளை எனும் நாமத்தோடு பல்வேறு அரச பாடசாலைகளிலே சமயமும் தமிழும் போதித்து அதன்வழி முறைப்படி இல்லற போகத்தை நுகர்தல் வேண்டி நயினாதீவைச் சேர்ந்த நல்லதம்பி சொர்ணம்மா தம்பதிகளின் புதல்வி தங்கலட்சுமியைத் திருமணஞ் செய்து சிவகுமாரன், ரஜனி, சூரியகலா, சிவகலா குகஸ்ரீ எனும் ஐந்து வாரிசுகளை அவனியில் நிலவிடச் செய்து அவர்தம் கல்வி, திருமணம் முதலாய அனைத்துக் கடமைகளையும் செவ்வனே நிறைவேற்றி இறுதியில் வானப்பிரஸ்த நிலைக்காய் தன்னை அர்ப்பணித்து "சித்தாந்த சரபம்" எனும் நாமத்தோடு மெய்கண்டார் நிறுவன குருமுதல்வர் ஞானப்பிரகாசம் சி.வ அடியார்க்கு அடியன் எனும் உயரிய ஆன்மீகத் தோற்றத்துடன் நீறணிந்த மேனியராய், சைவப் பாதுகாப்புச் சமய சமரச சேவை மூலம் 20ம் நூற்றாண்டு தொடக்கம் 21ம் நூற்றாண்டு கால முற்பகுதிவரை வாழ்ந்து சைவத்தின்பால் பேரன்பு பூண்டொழுகியவர் கலாநிதி கணபதிப்பிள்ளை எனும் குருமுதலோன்.

அத்தகைய செம்மல் வியவருடத்து ஏகாதசி திதி ரோகிணி பூர்வபக்க நன்னாளில் எண்பதாவது அகவையில் முத்திநிலையடைந்தனர். சைவமும் தமிழும் சால்புற்றோங்க இன்னும் இவர்போன்று பல சித்தாந்த சரபங்கள் இம்மண்ணில் மலிந்து தோன்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்

(கந்தபுராணம்)

"வெண்பா"

மின்னார் வியவருடம் மேலேகா. தசிபூர்வ
நன்ரோ கிணியிடத்து நல்லுலகே - இன்சைவ
சித்தாந்த சரபம் கலாநிதி கணபதிப்பிள்ளை
முத்திநிலை மன்னுசிவன் நாள்

ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி

சிவசித்தாந்த வித்தகர் கலைமணி
கதிர் - சரவணபவன்
(மாணாக்கர்)

உ

சிவமயம்

வவுனியா மெய்கண்டாராதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சிவம் அவர்கள் தமது 80 வது அகவையில் முத்தி அடைந்தமை அறிந்தேன். சைவப்பழம் ஒன்று கனிந்து இறைவனுடன் ஐக்கியமாகிவிட்டது.

சைவப் பணிக்கே தன்னை வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து வாழ்ந்த சிவத்தொண்டர் தனது பூர்வாச்சிரம வாழ்க்கையில் என்னோடு கைகோர்த்துப் பயணித்த நாட்களை நினைவுகளில் வளர்த்த பொழுது, அப்பரிசுத்த ஆத்மாவின் சுயநலமற்ற சிவப்பணி என்னை மெய் சிலிர்க்க வைத்தது. அவர் பற்றிய சில வரிகளை எழுதி மன ஆறுதல் பெற விரும்புகின்றேன். எல்லாம் இறைவன் செயல்!

1960 க்களில் இருவருமே யாழ்ப்பாணத்தில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது நன் மாணாக்கர்களால் தோற்றுவிக்கப் பெற்ற, பழம்பெரும் ஸ்தாபனமான யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சைவப் பணிகளால் ஈர்க்கப்பட்டோம். அச் சபையின் பல்வேறு பணிகளில் எங்களையும் அர்ப்பணித்துக் கொண்டோம். அன்று அவர் வாலிப வயதுடன் மிடுக்கான தோற்றமும் பெற்று பணிகள் பல புரிந்தமையால் யாழ்ப்பாணத்து சித்தாந்தக் கொள்கையைப் பின்பற்றுவோரிடம் ஒரு சரித்திரம் படைத்து வாழ்ந்தார். மிகப் பெரும் சாதனையாளர் அவர்.

யாழ்ப்பாணத்துச் சைவர்கள் இந்துக்கள் என்ற ஒரே குடைக்குள் ஒதுங்க முடியாது. அவர்கட்கே உரித்தான ஒரு தனித்தன்மை உண்டு. அதுதான் சைவம். சைவம் சிவசம்பந்தம் உடையது. இந்துக்கள் என்று சொல்வதிலும் பார்க்கச் சைவர்கள் என்று மார்தட்டிச் சொல்லிப் பெருமைப்பட வேண்டும் என்பார். சந்தானசாரியார்களைச் சற்குருவாக ஏற்று வாழ்ந்தார். இதனால் துறவறம் மேற்கொண்டதும், தமது திருநாமத்தை அங்ஙனமே மாற்றிக் கொண்டார். தேவாரம், திருவாசகம், பன்னிருதிருமுறைகளில் ஊறித் திளைத்தார். அதன் பயனாகச் சைவப் புலவர்,'' வித்துவான் பட்டங்கள் அவரை அலங்கரித்தன. ''சித்தாந்த கலாநிதி'' என்ற பெருமையும் இவரிடம் வந்தடைந்தது.

விடாமுயற்சி, அர்ப்பண சிந்தை, துறைசார் புலமை என்பன இவரைச் சைவபரிபாலன சபையின் உதவிச் செயலாளர் ஆக்கின. நாயன்மார்களின் குருபூசைகள், அகில இலங்கைச் சைவ மகாநாடுகள், மற்றும் சபையின் பல சிறப்பு விழாக்கள் அனைத்திலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். சமரசம் பேசுவோர்க்கு இவர் ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கினார். அசைக்க முடியாத ஆணித்தரமான கொள்கைத் திறமும், தமிழ் மற்றும் சமயப் புலமையும் சொல்

ஆட்சியும் பேச்சு வன்மையும் ஒருங்கே கைவரப் பெற்றவர். பெயரளவில் நான் கேள்விப்பட்டிருந்த சித்தாந்த சரபத்தை இவரில் கண்டேன். வியந்தேன்!

சைவபரிபாலன சபையின் பணிகளுடன் மட்டும் தன்னை மட்டுப்படுத்தாது, அதன் மேலும் ஆக்ரோஷமாகப் பணி செய்ய வேண்டும் என்ற அவாவும் வெறியும் அவருள் பிறந்தது. மேலை நாட்டினரின் சமய மாற்றத்தைத் துணிந்து கண்டித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் செயற்பாடுகள் இவருக்கு வழிகாட்டியாக அமைந்தன. அதன் பயனாகப் பிறந்தது தான் "நாவலர் பெருமான் கந்தப் புராண சபை என்ற அமைப்பு ஆகும். அதன் தலைவராக என்னை வைத்திருந்தார். நான் அவர் பணிகட்கு உறுதுணையாக இருந்தேன்.

'யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் என்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பொன்மொழிக்கு இணங்க, இவர் தன்னால் முடிந்த அளவிற்கு அக்காலாச்சாரத்தை மக்களிடையே பரப்பினார். கந்தபுராணச் சபை மூலம் அவர் எழுதியவை அனேகம். அவரது ஊற்றுப்பேனா என்ற எழுதுகோல், வற்றாத நீர்ச் சுனைபோல் மைசுரந்து எழுதிக் கொண்டே இருந்தது. இவர் எழுதிய கடிதங்கள், கட்டுரைகள், கண்டனங்கள், ஆணித்தரமாக நிலைநிறுத்திய சமயக்கருத்துக்களும், உண்மைகளும் பல சிறந்தவை. இவரது கண்டனங்கள் பலரை விழிப்படைய வைத்தன. சிலர் பலரால் கண்டனங்களுக்கும் ஆளானார். அவற்றால் இவர் சோர்வு சிறிதும் அடையவில்லை. தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற்று உய்ய வேண்டும் என்ற குறிக்கோளை வளர்த்து வாழ்ந்தார். சைவசமயத்தில் பரவிய நோய்களை இனங்கண்டு பொங்கி எழுந்தார். சைவத்தை இழிவுபடுத்துவர்கட்கு நச்சுக் கோடரியாக விளங்கினார்.

இவர் மேடை ஏறி முழங்கிய நிகழ்ச்சிகள் அளவிட முடியாதவை. எனது தாயார் திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அவர்களின் ஆழமான சித்தாந்த அறிவு இவரைக் கவர்ந்தது. திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் தர்மகர்த்தாவாகப் பணி புரிந்து நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் பேரில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலிவெண்பா என்ற நூலை ஆக்கி இருந்தார். அதேபோல் அவர் நல்லைக் கந்தன் பேரில் நல்லை வெண்பா என்ற நூலையும் இயற்றி இருந்தால் இவ் இரு நூல்களுமே தற்காலத்தில் கிடைத்தற்கு அரியனவாக இருந்தன.

திருமதி செல்லம்மா அவர்களிடம் நீராவிப் பிள்ளையார் பேரில் பாடிய 'கலிவெண்பா' வின் பழைய பிரதி ஒன்று இருந்தது. இக்கலிவெண்பா நூல் பண்டிதர்களுக்கே பொருள் கொள்ள முடியாத கடின நடையில் இயற்றப்பெற்று இருந்தது. இதைக் கேள்வியுற்ற சித்தாந்த கலாநிதி அவர்கள், அந்நூல் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற பெருநோக்கில் யாழ் வண்ணை

நாவலர் பாடசாலையின் அதிபராக இருந்த இயற்றமிழ் வல்லுனர் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களைக் கொண்டு அந்நூலுக்கு உரைஎழுதுவித்துப் பின் அதை "நீராவிப் பிள்ளையார் மஞ்சரி" என்ற நூலாக வெளியிட மிக்க உதவியாக இருந்தார். இது நடந்தது 1980 களின் முற்பகுதி ஆகும்.

நான் "வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றம்" என்ற சைவ அமைப்பின் தலைவராகப் பணி ஆற்ற எனக்குப் பற்பல ஆலோசனைகளை வழங்கி ஊக்குவித்தார். இவரால் பயன் அடைந்தோர் அனேகம்.

என் வாழ்க்கை ஏட்டில் தடம்பதித்த ஒருவரை நினைவு கூர்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அன்னாரின் பிரிவு சைவ உலகிற்கு ஓர்பேரிழப்பு என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. வாழ்வின் இனிமைகளைத் துறந்து ஞானம்தேடி சந்நியாசம் மேற்கொள்வது எல்லோராலும் முடியாது. மனவலிமை மிக்க அவரைப் போன்ற ஒரு சிலரால் மட்டுமே முடியும்.

39 பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்

வை. இரகுநாத முதலியார்
முன்னாள் சைவபரிபாலனசபை செயலர்
முன்னாள் நாவலர் பெருமான் கந்தபுராணசபை தலைவர்
தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்
நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம்.

## "ஆன்மீக ஆளுமையாளரான ஐயா"
## தமிழருவி, த.சிவகுமாரன் B.A (Hons)
## (தலைவர், வவுனியாத் தமிழ்ச் சங்கம்)

வாழ்ந்த பெரியோர்கள் வாழ்பவர்களுக்குப் பாடம். தன் வாழ்வையே அரியதோர் சமய பாடமாக ஆக்கி வாழ்ந்த பெரியார் சிவத்திரு. கணபதிப்பிள்ளை ஆசிரியர் ஐயா அவர்கள் நான் அவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இற்றைக்கு 33 வருடங்களுக்கு முன் கண்டேன். அன்றுமுதல் அவர் என்னுள் ஓர் பிரமிப்பை ஏற்படுத்திய ஆசிரியராகவே விளங்கி வந்தார். கல்லூரியில் அவர் ஓர் தனி ராஜாங்கமே சமய வழியில் நடாத்தினார் எனச் சொல்லலாம். தூய வெள்ளை கலாச்சார உடை, நீண்டு தொங்கும் வெள்ளைச் சால்வை நல்ல நிறம், வெள்ளைச் சிரிப்பு, புத்தகங்களை எப்போதுமே தாழவிடாமல் மார்போடு உயர்த்திப் பிடித்து அணைத்தபடி நடக்கும் நடை, ஒரு பக்கம் சாய்ந்தவாறு பேசும் பேச்சு. உயர்ந்த குரலில் உணர்ச்சி பொங்கக் கற்பிக்கும் முறை, இவையெல்லாம் அவருக்கு ஒரு தனியிடத்தையும் தனி மதிப்பையும் பெற்றுத் தந்தவை.

கல்விக்கு எப்போதும் முக்கியத்துவம் தந்த பெருந்தகை, B.A அந்த நாட்களிலேயே கற்றுத்தேறியதுடன் சைவசித்தாந்தத்தில் ஊறியவர். சிவனல்லால் தெய்வம் வேறில்லை, என்ற அயராத கொள்கையுடையவர். 'சித்தாந்த சரபம்' என்ற அவரது பெயருக்கேற்ப வாழ்ந்தவர். சிங்கத்தையும் வெல்லவல்லது சரபப் பறவை. அதுபோல சிவனொடு மாறுபட்டாரை தர்க்க ரீதியாக மறுத்து வெல்லும் ஆளுமை கொண்ட சரபமே இவர்.

மாணவர்க்கும் இளவயதினருக்கும் ஏதாவது கூறும்போது 'இல்லையடா தம்பிமார்' என்று அவர் தொடங்கும் அன்பு வார்த்தையே அவரிடம் மற்றவரைக் கட்டிப் போட்டுவிடும்.

நான் ஆலயங்களிலே சொற்பொழிவுக்கு செல்லும் போது பத்திரிகைகளில் என்ன விடயம் பேசப் போகிறேன் என்று விளம்பரங்கள் வரும். அதைப் பார்த்துவிட்டால் ஐயா அவர்கள், தனிச் சைவத்தோடு தொடர்புபட்ட தலைப்பாக இருந்தால் ஆதரித்தும், ஏனைய உட்சமயங்கள் தொடர்பாதையின் விமர்சித்தும் பதிவுத் தபாலில் கடிதம் எனக்கு அனுப்புவார். அவற்றை நான் மிகவும் மதித்து அவர் கருத்தைப் போற்றுவேன். பொழுது விடிந்தால் நாளாந்தப் பத்திரிகைகள் படிக்கத் தவறவே மாட்டார்.

வவுனியாவில் அவர் வாழ்ந்த காலத்தில் மெய்கண்டார் ஆதீன குரு முதல்வராகச் சில காலம், விளங்கிய பெருந்தகை இவர். அவரது இந்த தவ

வாழ்வையும் வளத்தையும் வவுனியா சரியாகப் பயன்படுத்தவில்லை என்றே சொல்ல வேண்டும். இத்தகைய ஞானியரின் வாழ்க்கை வவுனியா மண்ணுக்குப் புதிது. இந்தப் பாரம்பரியம் தெரியாத மக்களிடையே அவரது ஆதீன வாழ்வு சென்று சேரவில்லையென்றே சொல்ல வேண்டும்.

என்னைக் காணுகின்ற நேரமெல்லாம் அன்போடு உரையாடும் ஐயா அவர்கள் அடிக்கடி சொல்வர். தம்பி நீங்க நல்ல புகழோட இருக்கிறீர்கள், உங்கள் சொற்பொழிவுகளை புத்தகங்கள் ஆக்குங்கள், காத்தோட போக விடாதீர்கள் என்பார். அந்த 'குரு வார்த்தை' என்றும் எனக்கு உற்சாகத்தைத் தரும். நான் கல்லூரிக் காலங்களில் நேரடியாக ஐயா அவர்களிடம் கற்றிருக்க விட்டாலும் அந்தப் பெரியாரின் ஆளுமைகள் பலவற்றை உள்வாங்கிக் கொண்டவன்.

இப்படிப்பட்ட நல்லவர்களின் பெரியவர்களின் மறைவு ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட மனதில் ஓர் சோர்வு ஏற்படுகிறது. நல்லவைகள் போய்விட கஞ்சல் குப்பைகள் மிஞ்சிய பூமியாக இது ஆகிவிடுமோ என்ற ஏக்கம் என்னுள் ஏற்படுவதை ஐயாவின் மறைவு தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தி விட்டது என்பதை உணர்கிறேன். அவரது ஆன்மா எல்லாம் வல்ல தில்லைக் கூத்தன் திருதாள்தனில் இணைந்திருப்பதாக.

* * * * * * * * * *

## சைவப்புலவர் கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

அன்பும், பண்பும், அறிவும், பாரதியார் போல பாடல்கள் இயற்றுவதில் வல்லமை உடைய சைவப்புலவர் கணபதிப்பிள்ளை அவர்களாவார்.

எங்கள் வீட்டுக்கு அடிக்கடி அப்பாவுடன் கதைப்பார். பல கோயில் வரலாறுகளைப் பற்றி கதைத்து, பறளை விநாயகர், மூளாய் பிள்ளையார் கோயில் போன்ற வரலாறுகளை புத்தக வடிவில் எழுதி வெளியிட்டவர் சைவப்புலவர் கணபதிப்பிள்ளை அவர்களைச் சாரும். வண்ணார்பண்ணை சிவன் ஆலயம் போன்ற வரலாறுகளை எழுதியவராவார்.

இத்தகைய சிறந்த புலவர் சிவநெறிச் செம்மல் இன்றில்லையே என்பது யாவர்க்கும் கவலையே என் செய்வது பிறப்பும், இறப்பும், யாவர்க்கும் நியதியே என ஆறுதல் அடைவதே சால்புடைத்து அன்னாரின் ஆத்ம சாந்தி பெற இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

"ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி"

செல்லத்துரை வரதரத்தினம்
சுழிபுரம்

# என் இனிய ஆசான்

சுந்தர திருப்பதியாம் சுழிபுரம் தன்னில்
வந்துதித்த கந்தசாமி கணபதிப்பிள்ளை அவர்களை

எந்தை செய்த தவப் பயனால் நல்லாசானாய்
நான் பெற்று அகமகிழ்ந்தேன்.

பைந்தமிழ் இலக்கணத்தைப் பக்குவமாய்
பயிற்றிய வித்தகரே!

உந்தன் நாவினாலே தொன்மை மிகு தொல்காப்பியமும்,
வீரசோழியமும், நவிலுறு நன்னூலும் நடனமாடும்

விந்தை தனை நாம் கண்டு
வியந்து நாம் மகிழ்ந்தோம் அன்று,

அறந்தவறா உங்கள் பணியை
ஆதீனங்கள் அழகாய்ச் சொல்லும்

சிறந்து விளங்கும் உங்கள் கல்விப் பணியை
சீர் பெற்ற இவ்வுலகம் வாழ்த்தும்

கண்டிப்பும் கனிவும் கணக்காகக் கலந்து
தன்னலம் கருதாமல் தமிழைப் பயிற்றுவித்தீர்!

என்று இனி நாம் காண்போம் இணையற்ற
எம் இனிய ஆசானை

கண்ணீர்ப் பூக்களை தங்கள் பாதத்தில்
காணிக்கையாக்கிக் கலங்கி நிற்கின்றோம்


விண்ணுலகு நீங்கள் விரைந்து சென்றாலும்
மண்ணுலகில் உங்களை என்றும் நாம் மறவோம்.

திருமதி. சாந்தி பிரபாகரன்
இரத்மலானை இந்துக்கல்லூரி
கொழும்பு.

உ

சிவமயம்

# சித்தாந்த சரபம்



# ஸ்ரீலஸ்ரீ கணபதிப்பிள்ளை

# நீங்காத நினைவலைகள்

வாழ்விற்கு வழிகாட்டிய அறிவுத் தீபமே, கண்ணை இமை காப்பதுபோல் பாசமுடன் வளர்த்தீரே, உங்கள் வார்த்தைகளும், கண்டிப்பும், எம்மை விட்டு நீங்காதே ஆசிரியத்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு, எம்கல்வி ஓர் நல்லாசான்.

நன்மிடுக்கும் நேர்மையும், அஞ்சா நெஞ்சமும் கொண்டு, கல்வி உலகுக்கு ஓர் கலங்கரை விளக்கமாய் வாழ்ந்தீரே, சைவம் போற்றும் உலகுக்கு அறப்பணிகள் புரிந்தீரே, உங்கள் தன்னலமற்ற சேவையை கற்றவரே நன்கு அறிவார்.

சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களைத் தெளிவாக விளக்கி சிவஞானபோத உட்பொருளைப் பலர் அறியச் செய்து "இறைவன் ஒருவனே உளன்" என்றும் அவனே சிவன் என்றும் சித்தாந்தப் பிரியர்களுக்கு விளக்கமாய் எடுத்துரைத்தவரே.

நாவலர் வழிவந்த கொள்கைகளைப் பின்பற்றி, சமூகத்திற்கு அளப்பரிய தமிழ்ப்பணி, சமயப்பணி பலபுரிந்து, உலகம் போற்றும், உத்தமனாய் வாழ்ந்த எம் தந்தையே, எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீரே.

திருமதி. சூரியகலா நித்தியானந்தன் (மகள்)
ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி,
கொழும்பு.

## எங்கள் அப்பா

வெண்மையின் பிறப்பிடம்
தூய்மையின் இருப்பிடம்
வாய்மையின் புகழிடம்
செய்மையின் வதிவிடம் எங்கள் அப்பா

கல்வியை புகட்டிப்
பண்பினை போதித்து
அன்பினை அள்ளிக் கொடுத்து
நன்மையை செய்திடுவர் எங்கள் அப்பா

அறவழியை அன்போடு நேசித்து
கடமையை செய்வையாக செய்வித்து
நலமுடனே நல்ல வாழ்க்கை வாழ்ந்து
வளமுடனே வாழ வழி நடத்திய எங்கள் அப்பா

ஆன்மீகத்தை மக்களுக்கு போதித்து
துறவியலில் தன்னை ஈடுபடுத்தி
சிவமே உலகமென்று வாழ்ந்து
இறைவனுடன் கலந்திட்ட எங்கள் அப்பா

என்றென்றும் நாம் மறவோம்
எங்கிருந்தாலும் எங்களுக்கோர்
எடுத்துக் காட்டாக நீங்கள் இருப்பீர்கள்
என்ற நம்பிக்கையோடு
வான்மேலே நட்சத்திரமாய் ஒளித்திடுவீர் எங்கள் அப்பா

அன்பு மகள்
குகஸ்ரீ
(லண்டன்)

# தாத்தா காட்டிய சைவசித்தாந்தம்

அருள் மிக்கோர் பேசும் பேச்சில் படைக்கும் படைப்புக்களில்
அழகிருக்கும் ஆழம் இருக்கும் நுணுக்கம் இருக்கும்
அத்தகைய அழகு, ஆழம், நுணுக்கம் நிரம்பப் பெற்றவர்
ஞானகுரு க.கணபதிப்பிள்ளை தாத்தா அவர்கள்

எனது சிறுவயதில் இருந்தே
அவர்களை யான் அறிவேன் இவர் தனது ஒவ்வொரு
நொடிப்பொழுதையும் சைவசமயத்திற்கும் தமிழுக்குமாக
அர்ப்பணித்தவர்

நான் கா.பொ.த சாதாரணதரம் கற்கும் போது சைவமெய்யியல்
பற்றித் தெளிவாகவும் சுருக்கமாகவும் அழகாகவும் கற்பித்தவர்.
அவர் கூறியதாவது

சைவசித்தாந்தம் ஆனது சிவவழிபாட்டு முறைகளையையும்
அவை தொடர்பான மெய்யியற் பிரிவுகளும்
விதந்து கூறும் முக்கிய உண்மைகள் அடங்கிய
உன்னத கோட்பாடு ஆகும்

“வேதாந்த தெளிவாம் சைவசித்தாந்தம்” என உமாபதிசிவம்
சிவப்பிரகாசத்திலும் “நவமான வேதாந்த ஞான சித்தாந்தமே”
எனவும் “சிவமாதல் வேதாந்த சித்தாந்தம் ஆகும்” எனவும்
திருமூலர் திருமந்திரத்திலும் குறிப்பிட்டுள்ளார்

சைவசித்தாந்த சிந்தனை மரபைப் புரிந்துகொள்ள
சிவஞான சித்தியார் என்ற நூலின் பிரமாணவியல் எனும் பிரிவில்
விபரிக்கப்பட்ட பிரமாணங்கள் பற்றிய அறிவுத்தேர்ச்சி அவசியம்.

## *சைவசித்தாந்த சிந்தனையை விளக்குவன*

காட்சியளவை (பிரத்தியட்சப் பிரமாணம்) கருதலளவை (அனுமானப் பிரமாணம்) நூலளவை (ஆகமப் பிரமாணம்) எனும் மூன்றுமாம் காட்சியளவை எளிமையாகக் கூறின் கண்ணாற் கண்டதே மெய் கண்ணாற் காணாதது பொய் என விளக்குகின்றது. கருதலளவையானது ஒரு செயல் நிகழும் போது உண்டாகும் விளைவைக் கண்ட ஒருவர் பின்னர் யாதாயினும் ஒரு தடை காரணமாக அச்செயலைக் கண்ணாற் காணா இயலாவிட்டாலும் அவ் விளைவைக் கண்டு அச்செயல் நிகழ்ந்துள்ளது என ஊகிப்பது கருதலளவை ஆகும்.

நூலளவையானது மெய்யறிவு மேம்பட சிந்தனைவளம், தெய்வநிலை அடைந்தோர் என உத்தமர்களின் நூல்கள் ஆகும்.

தெய்வநிலை அடைந்தோரின் ஞான சிந்தனைகளை உணர்ந்து (உட்கிடை) தவறான கருத்து எடுக்காது சைவநெறிமுறைகளையும் காட்சியளவை கருதலளவை நூலளவை என்னும் பிரமாணங்களை இணங்க பிரயோகித்தல் சைவசித்தார்ந்த சிந்தனைத் தெளிவிற்கு இன்றியமையாதது.

மேலும் சைவசித்தார்ந்த கோட்பாட்டின் உயர்நிலையாக விளக்குவது சற்காரியவாதம் ஆகும்.

உள்ளது இல்லது, இல்லாதது உள்ளதாகாது, உள்ளதிலிருந்தே உள்ளதுதோன்றும், இல்லாததில் இருந்து உள்ளது தோன்றாது எனும் நான்கு கூற்றுகளும் சற்காரியவாதத்தின் அங்கமாகும்.

அளவையியல் நெறிமுறைகள், சற்காரியவாதம் என்பனவற்றின் அடிப்படையில் சைவசித்தாந்த கோட்பாடு உலகப்பொருளை மூன்று பிரிவில் அடக்குகின்றது. பதி, பசு, பாசம் இம்முப்பொருளும் அநாதியானது தொடக்கம் முடிவு இல்லாத உள்பொருள்கள் என சைவசித்தாந்த கோட்டிபாட்டின் அடிப்படை உண்மை.

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் நீக்கமே முத்திப்பேறின் தகுதியாகும்.

சைவசித்தாந்த சிந்தனைகளின் ஊற்றுக்கண் ஆகிய திருமந்திரத்தில் திருமூலர்

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்

முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவார்களே''
என்று கூறுதல் கவனத்துக்கு கொள்ளற்குரியது.

இவ்வாறு எனக்கு சுருக்கமாக விளக்கிய எனது தாத்தா அவர்கள் எம் மனதை விட்டு அகலாத பெரியோர்கள் வரிசையில் இடம்பெற்றுள்ளார்.

இறைவனுடன் இரண்டறக் கலந்த சித்தாந்தசரபம், ஞானப்பிரகா சசிவம், சிவத்திரு க.கணபதிப்பிள்ளை அவர்களின் கோட்பாட்டில் நின்று சுந்தரமூர்த்திநாயனாரை தெய்வமாகக் குருவாக, தாயாக, தந்தையாக நினைத்து சேரமான் பெருமான் சிவபேறடைந்தது போன்று யாமும் இவரைப் போற்றி உய்வோமாக.

''சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை''

''ஒன்றவன் தானே
ஒருவனே தேவன்''

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

**பேரன்**
**க.திவாகரன் (மாணவன்)**
**(வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)**

# எம் தாத்தா

கற்றவர்கள் காமுற
கம்பீரத் தோற்றத்தில்
பட்டங்கள் பலபெற்ற
பண்டிதர் எம் தாத்தா ....................

காவி உடையிலே - அவர்
கண்ணியமாய் வாழ்ந்து
காலத்தின் கோலத்தை
கருத்துடன் ஆராய்ந்து
பாரிலே பரமன் ஒருவனே - என
பகிரங்கமாய் பறைசாற்றியவர்
எம் தாத்தா ....................

சைவமும் தமிழும் இரு கண்கள் - என
தம் உடல் பொருள், ஆவியினை
எம்பிரான் சிவனுக்கே அர்ப்பணித்தவர்
எம் தாத்தா ....................

ஞாலத்தில் வெளிவரும் ஞானச் சுடர்களை
தீபச் சுடர்களாக்கி - ஞான ஒளியாக
விளங்கியவர் எம் தாத்தா ....................

பேணி வளர்த்தது பேரக் குழந்தைகளை மட்டுமல்ல
பேரறிவுள்ள ஞானிகளையும் தான்
எத்தனை எத்தனை சீடர்கள் உங்கள் வாழ்விலே
எத்தனை எத்தனை ஞானிகள் உங்கள் ஞானப் படியிலே

விழிகள் விழிக்க மறந்ததோ
தாத்தா - உங்கள்
கண்கள் படிக்க மறந்ததோ
எங்கள் எல்லோரையும் ஏங்க வைத்து
எங்கே சென்றீர்கள்? தாத்தா?

**அன்புயிர்**
**பேரப்பிள்ளைகள்**

# எங்கள் அன்புத் தாத்தா

உலகம் போற்றும் உத்தமனாய் வாழ்ந்த எங்கள் தாத்தாவை
நாங்கள் செய்த முன் தவப்பயனாய் இறைவன் தந்தான்.
உங்கள் அன்பும் இனிய சொல்லும் அரவணைப்பும்
எங்கள் மீது வாரி வழங்கிய வள்ளலே!

எங்கள் மழலைமொழி கேட்டு, மகிழ்ந்திருந்த வேளையில்
இன்று உறங்குகின்றாயோ, எம் இனிய தாத்தா.
உங்கள் குரல்கேட்க, எங்கள் மனம் துடிக்கின்றது
என்று இனி நாம் காண்போம்! என ஏங்கித் தவிக்கின்றோம்.

உம்மோடு சேர்ந்து பலகதைகள் கேட்டு வாழ்ந்த நாம்
திடீர் மறைவை எண்ணிக் கலங்கி நிற்கின்றோம்.
விண்ணுலகம் நீங்கள் சென்று மறைந்தாலும்
மண்ணுலகம் உங்கள் பணியை மறவாதே!

பேரப்பிள்ளைகள்
சி. லக்சனன் அங்கஜன், பூரணி

# Appreciation

Our precious grandpa! You've taught us our mother toungue and spiritual norms and paved way to lead a noble and righteous life. Now where have you gone? Though we're separated by the sea, we rushed to see your pleasant face. Alas! the Yama beat us in the chase and took you way but not your thoughts. In every moment of our lives, wherever we go, you are with us in our achievements and success. The vacuum you have created is irreplaceable. we warmly dedicate our trickles of dismerriment for you.

| | | | |
|---|---|---|---|
| **1.** | **S. Lakshitha** | **2.** | **S. Lakkana** |
| **3.** | **S. Lakahayini** | **4.** | **S. Lakshanan** |

**Loving Grandchildren London**

# I Remember The Special Memories, I Had with my Special Grandfather!

I was a little girl at the age of six,
That was when I first saw my Grandfather,
Four years later, I visited my Grandfather for the second time,
I remember the loving memories I had with my grandfather,
I remember my grandfather always wore white clothes,
I remember my grandfather always loves to worship god,
I remember my grandfather's kind and gentle words,
I remember my grandfather always loves to read many novels and newspapers,
I remember my grandfather is always a vegetarian,
I remember my grandfather is a great person who is very well educated,
I remember my grandfather was a courageous person and an optimist who a ways looks on the bright side of things.
I remember my grandfather always loves his grandchildren,
I remember the time when I presented a silver pen when I was Leaving for Canada,
I remember the time when my mom was taking pictures and my grandfather said he will only be in one picture,
I will remember all the specials memories I had with my special grandfather,
I remember his bright smile and kind words that I'll never forget till the rest of my life,
All these things I remember will be placed in my heart, as my special memories I had with my grandfather!

**By Grarddaughters from Canada, Tharsika Thavarajah & Krishni Thavarajah**

# Beloved Grand dad

Our loving grandpa you are not with me now. I was recalling all my memories when I first came to Sri Lanka three years ago I met my grandpa.


He was tall, smart and full of white. He was find of children with his smiling face. So I was attracted to him in the first time. He was always reading and writes articles. In his room full of books and newspapers. He didn't like people touch his books without his permission. Because his life-is books.

He helped me a lot and care about me, One day I was with my grandpa, I felt little bit bored, He realised that and take me out to the street. He bought some sweets and peanuts. That day it was very hot so he took his umbrella and brought me home.

Grandpa you are with god now. I always remember you in my heart.

Yours loving grand daughter
Thivany Ravichandran (London)

# குருமுதல்வரின் இளமைத் தோற்றம்



## அவர் வெளியீடு செய்த

### கட்டுரைகள், கவிதைகள், கடிதாங்கள், வாழ்த்துக்கள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திருஞானசம்பந்தசற்குரு துணை

"ஞாலநின் புகழே மிக வேண்டுந் தென்
ஆலவாயி லுறையும் எம் ஆதியே"

# மதுரை, திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம்

## பட்டமளிப்புப் பத்திரம்

சைவ சமயத்திற்கும், செந்தமிழ் மொழிக்கும் திருவருள் துணைகொண்டு தொண்டாற்றிவருந் திருவாளர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் சீரிய பணிகளைப் பாராட்டுமுகத்தான் நமது ஆதின ஆதிகுருமூர்த்தி, திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளது குருபூசை மகோற்சவத்தில் சித்தாந்த கலாநிதி என்ற சிறப்புடைப் பட்டஞ்சூட்டி, அவர்களது திருத்தொண்டு மேன் மேலுஞ் சிறக்கத் திருவருளைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

நாளிது பரிதாபி வருஷம் வைகாசி - மீ 17 உ செவ்வாய் கிழமையன்று நடைபெற்ற பூசைமுகத்தில் அருளப் பெற்றது.

மதுரை

30.05.1972

**ஞானசம்பந்ததேசிகர்**

# நாவலர் பெருமானைப் பற்றி எழுத நாம் யார்?

*- ஞானப்பிரகாசசிவம்*

செந்தமிழையும் சிவநெறியையும் இந்நிலவுலகில் பாதுகாக்க வந்தவர் நாவலர் பெருமான். தமிழின் ஆழம் அகலம் நீளம் யாவும் கரைகண்ட அகத்தியரவர் எனில் மிகையாகாது. தமிழை உடலாகவும் சைவத்தை உயிராகவும் கொண்டவர், கண்டவர் நாவலர் பெருமான். சைவ வினாவிடை இரண்டினில் ஒன்று சிறுவர்க்காகவும் மற்றது பெரியவர்கட்காகவும் நாவலர் தந்தார். இவை இரண்டும் வேத சிவாம புராண இதிகாச சாத்திர தோத்திர சாரமாகும். சைவ வினாவிடைகளை மாத்திரமன்றி முப்பெருஞ் சைவப்புராணங்களையும் கற்றாரும் கல்லாதாரும் விளங்கிப் பயன்பெற வசன நடையிலே தந்த வள்ளல் அவர்.

எந்தப் பயிரும் வளர்ந்து பயன்தர வேண்டுமாயின் அந்தப் பயிரோடு வளரமுனையும் களைகளை உடனடியாகக் களைதல் வேண்டும். அங்ஙனம் களையாவிடின் பயிருக்கே பேராபத்து விளையும். பயன்பெறவே முடியாது. இது போலச் சமயகுரவர் சந்தான குரவர்களால் வரையறை செய்யப்பெற்று வளர்த்து எடுக்கப் பெற்ற சைவசமயத்தை இந்து சமயத்தின் பிறபிரிவுகளும் புறச்சமயங்களும் சீர்குலைக்காமல் நாவலர் செய்த பணிகளோ அளப்பில. இன்று சைவநெறிக்குள்ளே மாற்று இந்துசமயக் கொள்கைகள் ஊடுருவியுள்ளன. வேலியே பயிரை மேய்ந்த கதையாகச் சைவசமயத்திற்கு முழுமாறான ஸ்மார்த்தக் கொள்கைகள் உட்புகுந்துள்ளன.

பெரியபுராண வசனத்திலே நாவலர் பெருமான் ஸ்மார்த்தம் பற்றிச் சிறந்தவோர் எச்சரிக்கை விடுத்துள்ளார். நாவலர் பெருமானின் எச்சரிக்கையைச் சைவர்களாகிய நாம் கவனத்திற் கொண்டுள்ளோமா? கவனத்திற் கொண்டிருப்போமாயின் எங்கள் சமூகநிலை நாவலர் காலத்திலும் பார்க்க மிகவும் பிற்பட்டிருக்கும் நிலை இன்று ஏற்பட்டிருக்கவே மாட்டாதல்லவா?

இன்றைய சைவசமயத்தவர்களுக்கு சைவசமயத்தவர்கள் விலக்க வேண்டிய பஞ்சமாபாதங்கள் எவை எனத் தெரியாது. தெரிந்தவர்களும் பின்பற்றுவதில்லை. சைவசமயம் கலப்படம் செய்யப்பட்டது - படுகின்றது என நாவலர் நெறி நின்று ஒருவர் சொல்வாரேயானால் அவரை வாழ்த்துவோர், வரவேற்போர் விரல் விட்டு எண்ணத்தக்க சிலரேயாவர். வீழ்த்துவோர் பற்பலர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்திலே பாண்டிநாட்டிலே இருவர் இருந்தமையால் அந்நாடு மீண்டும் சைவத்திருநாடு ஆகியது. அதுபோலவே நாவலர் காலமும் இருந்தது. நாவலர் தனித்து நின்று சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் அவற்றின் வழிவந்த பண்பாட்டையும் பாதுகாத்தார். அவர்போல் இன்று யார் உளரோ?

ஆனால் இன்றைய நிலையில் எத்தனையோ சங்கங்கள், சபைகள் இருந்தும் அவை தேவாரத்திருப்பதிகம் முழுமையாக ஓதும் சுதந்திரம் மறுக்கப்பட உதவுகின்றனவே அன்றி குரல் கொடுப்பதாகத் தெரியவில்லை. சைவத்தை இந்துவாக்கும் பரிதாபநிலை. சைவசமயம் என்பது கைவிடப்பட்டு இந்துசமயம் என்னும் பெயர் கைக்கொள்ளப்படுகின்றது. மாடு, ஆடு, நாய், நரி என மிருகங்கள் இருக்கின்றன. மிருகம் என்னும் பெயரில் எந்த மிருகமும் இல்லை. அதே போலச் சைவம், வைணவத்தை, ஸ்மார்த்தத்தைக் குறிக்கும் பொதுப் பெயரே இந்துசமயம். இந்து சமயம் என்னும் பெயரில் சைவத்திற்குப் பதிலாக ஸ்மார்த்தம் இன்று கைக்கொள்ளப்படுகின்றது. எனவே நாவலர் பெருமான் பற்றி எழுத நாம் யார்? இங்ஙனம் எழுதினால் அதனை வரவேற்பார் எத்தனை பேர் எம்மிடையே உளர்?

**'எம்மால் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே'**

# சித்தாந்த மெய்

சைவசித்தாந்த சாத்திரம் சிவஞானபோதம். அதன் வழிவந்தது சிவஞானசித்தியார். சார்பு நூல் சிவப்பிரகாசம்.

இவை மூன்றிலும் இரு பிரிவுகள் உள. முதற்பிரிவு பொது அதிகாரம், இரண்டாம் பிரிவு சிறப்பு அதிகாரம்.

அதன் மற்றோர் பெயர் உண்மை அதிகாரமே மெய். பொது அதிகாரம் பொய் என்பது சிறந்த, சிறப்பான சைவ சித்தாந்த முடிபு.

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றில் பதி ஒன்றே மெய், ஏனைய இரண்டும் பொய் என்றால் அது சித்தாந்தமாகாது. மாயாவாத வேதாந்தம்.

அதே மாயாவாதம், வேதாந்தம் போலவே பாசத்தைப்பொய் என்கின்றது சித்தாந்தம். ஆனால் பொய் என்பதன் கருத்து சித்தாந்தத்தில் வேறு, மாயாவாதத்தில் வேறு. ஒன்றுக்கு ஒன்று மாறு.

இஃது எவ்வாறு ? என்பது பெரிய கேள்வி, பெரியசிக்கல். இங்கே சைவ சித்தாந்தத்தில் பொய் என்பதன் பொருள், "விளங்கித் தோன்றாது" என்பதாகும். இல்லை என்பது சைவசித்தாந்தத்தில் இல்லை. மாயாவாதத்தில் பொய் என்பதன் பொருள் இல்லை என்பதாகும். முப்பொருளில் ஒரு பொருளே மெய்பிறபொய், அது பரம்பொருள் என்பது அது முப்பொருளில் பரம்பொருளே மெய்ப்பொருள் என்றும் விளங்கித் தோன்றுவது, ஏனைய இரண்டும் "பொய்" அதாவது மெய்யின் முன்னே அவை விளங்கித் தோன்றா என்பதே சைவசித்தாந்தமுடிவு. முப்பொருளும் உண்மையாயினும் விளங்கித் தோன்றுவது ஒன்றேயொன்று.

இவ்வாற்றால் முப்பொருளைப் பொது அதிகாரத்தில் மெய்மைப்படுத்திய சித்தாந்தமே உண்மை அதிகாரத்தில்

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க.
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" என முதலில் முப்பொருளில் மூன்றாம் பொருளாகிய பாசம் இல்லை என விளங்கித் தோன்றா தெனக் கூறுகின்றது.

அன்றியும் ஆன்மா ஏகனாகின்றது. ஒன்றே ஆகின்றது என்கின்றது. ஆன்மா தன்னை இழந்து தன்நாமம் கெட்ட பேரின்பநிலை அது. அந்நிலையில் அது சிவமயமாகித் தன்னை இழந்து சிவத்தையே அனுபவித்துச் சிவமயமாகியே விடுகின்றது. இது சொரூபநிலை.

இந்நிலையில் ஆன்மா விளங்கித் தோன்றாமையால் சிவம் ஒன்றே விளங்கித் தோன்றும். அத்துவிதநிலை இரண்டு அற்ற ஒன்றாம்நிலை ஆகிய நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் சீவமுத்தராக இவ்வுலகில் சீவன் சிவமாக வாழவைப்பதே சித்தாந்தச் சிவநெறி. உள்ளம் சிவ மயமானால் உலகமே சிவமயம் யாவும் சிவமயம். அது வொன்றே மெய்ப்பொருள்! ஏனைய இரண்டும் விளங்கித் தோன்றா.இதுவே சிவமயம். சித்தாந்தம்.

சைவசித்தாந்தசோதி சஞ்சிகைக் கட்டுரை இது 1993

க.கணபதிப்பிள்ளை
சித்தாந்த கலாநிதி

உ

சிவமயம்

# சிவஞானமும் பாசப்பொருளும்

"அருளே உலகெலாம் ஆள்விப்பது. எப்பொருளிலும் அருளைக் காண்பது சிவஞானநெறி. கல் சிலையாகிக் கோயிலில் சிவஞான நெறி காட்டுகின்றது. "ஆலயந் தானு மரனெனத்தொழுமே" என்பது மெய்கண்டாரின் சிவஞானபோத இறுதித் திருவாக்கு, விடிவாமளவும் விளக்கனையது மாயை. சம்பந்தர், வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக என்றமை பாசஞான அரசியல் ஞானமா? திடம்படு மெய்ஞ்ஞானஞ் சேர உடம்புந் தேவை என்கின்றாரே திருமூலர். சித்தாந்த பாதமாகிய சரியை கிரியைகள் பாசஞானமா? பொதுவுடமை நாட்டில் பரவ நமது மெய்ஞ்ஞானிகள் காட்டிய வழியே சிறந்தது என்பது இந்துசாதன ஆசிரிய வசனமாயிற்றே. இவையாவும் வித்தியா அகங்காரத்தில் திளைத்துத் தோல் தடித்ததாற் கூறியவையா? முதலையின் தடித்த தோலில் சூலாயுதம் சுலபமாக ஏறிவிடுகின்றதே! பாசப் பொருளாற் சிவஞான நெறிகாட்ட முடியாதென்ற கடிதர் எங்ஙனம் பாசப் பொருளாகிய பத்திரிகையாற் சிவஞானநெறிகாட்ட முற்பட்டார். இனி நமது பேச்சுக்கே இடமில்லை. வணக்கம்.

க. கணபதிப்பிள்ளை
சைவசித்தாந்த சரபம்
42/5 கல்லூரி வீதி
யாழ்ப்பாணம்
15-2-72

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவத்தமிழ் இந்து சமயத்தவர்களுக்கு அன்பான அநுபவ வேண்டுதல்

விநாயகப் பெருமானுக்கு வணக்கம்.
வாசகர்களுக்கு வணக்கம்.
சைவசமயம் எங்கள் சமயம்
நாங்கள் தமிழர்கள்.
எங்கள் சமயநூல்கள் தமிழிலே உள.

தோத்திரம், சாத்திரம், புராணம் என்பன அவை. குழந்தையாக இருக்கும் போழ்து தலையே நீவணங்காய் போன்ற தேவாரங்களைக் கேட்ட செவிகள் எங்கள் செவிகள், பாலராகப் பாடசாலைகளிலே படிக்கும்போது நாம் சைவசமயத் தோத்திரங்களையும் சைவ சமய குரவர் நால்வரையும் நன்கு அறிகின்றோம்.

நாம் வழிபடுவதற்கு மூலைமுடுக்கு எங்கும் கோயில்கள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் சைவக் கோயில்கள். பிற மதக் கோயில்களையும் காண்கின்றோம். அவற்றையும் அன்புடன் நோக்குகின்றோம். பிற சமயத்தவர்களையும் சந்திக்கின்றோம். அன்போடு பழகுகின்றோம். அன்பேசிவம் என்பது எமது சமயமாகும்.

அன்பே சிவம் எனக் கூறியவர் யார்? அவர் திருமூலதேவநாயனார். திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றுள் பத்தாந்திருமுறை திருமந்திரம். அதனை அருளியவரே திருமூலர். இலங்கையைச் சிவபூமி என்றவர்.
திருமூலதேவநாயனார் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். அவர் வரலாறு விரிவாகப் பெரிய புராணத்திலே உளது. திருமந்திரத்திலும் ஓரளவு உளது.

நாம் ஓதும் திருமுறைகளில் ஐந்து பஞ்சபுராணம் எனப்படும். அதிலே திருமந்திரம் இடம் பெறவில்லை. ஏன் இடம் பெறவில்லை? திருமந்திரம் சாத்திர நூலாகவும் உளது. சாத்திர நூல்கள் பதினான்கு. அவை தோத்திரம் போல ஓதத்தக்கவை அல்ல. கடும் முயற்சி, ஆழமான இலக்கண தருக்க அறிவு தேவை. சாத்திர நூல்கள் சூத்திரமாகவே உள. மந்திரம், சூத்திரம் என்றால் என்ன? பல சொற்களிலே சொல்லவேண்டிய ஆழமான கருத்துக்களை ஒருசில சொற்களிலே மிகச் சுருக்கமாகச் சொல்வதே சூத்திரம். நன்னூல், தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூல்கள் சூத்திரமாகவே உள. அவற்றுக்குப் பற்பலர் உரை கண்டுள்ளனர். உலகப் புகழ்பெற்ற திருக்குறள் சூத்திரத்தன்மையாக

"அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே"
-சிவஞானசித்தியார் 292

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகர் இல் இறை நிற்கும் நிறைந்து" -திருவருட்பயன்-

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. -திருக்குறள்.

உண்மை விளக்கம் "புதல்வா" என்கிறது. இதனை விளக்கும்போது "தெரிந்த குருமுதல்வர் உயர்சிவ ஞானபோதம் செப்பினர். பின்பு அவர் புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர்" என்னும் சிவப்பிரகாசப் பகுதியை எடுத்துக்காட்டி துகளறு போதமும் தருமை ஆதீனத்துச் சம்பிரதாய தீபமும் கூறுகின்ற பின் வரும் செய்யுள்களை முறையே எடுத்துக் காட்டியுள்ளார்.

"கருவேப்பிலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவாத இன்பத்துள் வைத்த - குருவின்
அடியார் அடியார் அடியார் அடியார்
அடியாரைச் சார்ந்த அவர்" துகளறு போதம்
"குருவே உபதேசம் கூறு என் குருவின்
குருவின் குருவின் குருவின் குருவின்
குருவின் குருவின் குருவின் குருவின்
குருவின் உபதேசம் சொல்வேன் கேள்"
- சம்பிரதாய தீபம் -



காஞ்சி மெய்கண்டார் ஆதீன 229 ஆம் குருமூர்த்திகளின் நூல்கள் உரைகளை மெய்கண்டார் சந்தான குருமரபுக்கு ஏற்றவாறு உபதேசிப்பதே இலங்கை மெய்கண்டார் ஆதீனத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். அது நிறைவேறத் திருவருள் துணை புரியுமாக.

"ஒளியில் இருள் அடங்கி ஒளியாய் நிற்றலைக் கதிரோன் ஒளியில் உலகிருள் அடங்கி ஒளியாய் நிற்றலால் அறிக. அவ்வாறே ஆணவ இருள் ஞான ஒளியில் அடங்கி, அந்த ஞான ஒளியாகியே நிற்கும்" என்பதும் சுவாமிகளின் உரை விளக்கமாகும்.

இக்கட்டுரை சைவநீதி 15-10-1999 இதழில் வெளி வந்ததாகும்

## இலங்கை மெய்கண்டார் ஆதீனத் தாபகராகிய காஞ்சி தொண்ட மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சைவசித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை
(மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர்)

சீலத்திரு சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் வித்துவான் முத்து. க.மாணிக்கவாசக முதலியார் என்பதாகும். தருமபுர ஆதீனப்பல்கலைக் கல்லூரி முதல்வராக விளங்கியவர். பின்னர் காஞ்சி மெய்கண்டார். ஆதீன 229 ஆவது குரு மூர்த்திகளாக விளங்கினார். இவர்கள் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் சிலவற்றிற்கு அரிய உரை கண்டுள்ளார்கள்.

சித்தாந்த சாத்திரத்தில் உண்மை விளக்கம் என்பது மெய்கண்டாரின் நேர்மாணவர் மனவாசகங் கடந்தாரால் இயற்றப் பெற்றதாகும்.

ஆறாறு தத்துவம் எது? ஆணவம் ஏது? வினை ஏது? நான் ஏது? நீ ஏது? நாதன் நடம் ஏது? அஞ்செழுத்து ஏது? பேரின்பம் ஏது? என்பனவற்றிற்கு மெய்கண்டார் கூறும் விடைகளைக் கொண்ட அரிய நூலே உண்மை விளக்கம்.

உண்மை விளக்கத்தில் மாணாக்கர் "குருநாதரே! என் வடிவத்தைக் கட்டினீர், சிவரூபத்தைக் காட்டுவீராக" எனக் கேட்க ஆசிரியர் "கண்களுக்குக் கதிரவன் நின்று காட்டி உதவுவது போல, நாம் உன் அறிவுக்கு அறிவாய் நின்று அறிவித்திடுவோம்" என்கின்றார். இதனை விளக்கி உரை எழுதிய சுவாமிகள் சிவஞானபோதம், சித்தியார், சிவஞான முனிவரின், சிற்றுரை, பேருரை, திருமந்திரம் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு விளக்கியு ள்ளார்கள்.

எழுத்துக்கள் எல்லாவற்றிலும் அகர உயிர் நிற்கின்றது. அதுபோல யாம் எல்லா உயிர்க்கும் உயிராய் இருக்கின்றோம் எனத் திருக்குறட் கருத்தினை உண்மை விளக்கமும் உரைப்பதனை பின்வரும் எடுத்துக் காட்டுக்களால் விளக்கியுள்ளார்.

"அக்கரங்கட்கு எல்லாம் அகர உயிர் நின்றால் போல் மிக்க உயிர்க்கு உயிராய் மேவினோம்" உண்மை விளக்கம். "அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல்"

*-சிவஞானபேத வெண்பா-*

உள்ளமையால் இன்றும் பலர் அதற்கு உரை எழுதிக் கொண்டே இருக்கின்றனர்.

பரிமேலழகர் எழுதிய திருக்குறள் உரையே சிறந்தது என்பர். ஆனால் அவ்வுரையைக் கற்பதாயின் நல்லாசிரியரின் துணை வேண்டும். அதுபோலச் சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்க நல்லாசிரியர் குரு மிக அவசியமாகும்.

அவ் ஆசிரியர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்கும் மிக மேலான ஞான ஆசிரியராக - ஞான குருவாக இருத்தல் வேண்டும் என்பது சைவ சமயக் கட்டுப்பபடாகும்.

தமிழிலே தலைசிறந்த சாத்திர நூல் மெய்கண்ட தேவநாயனார் அருளிச் செய்த சிவஞானபோதமாகும். அதனைத் தமிழிலே சூத்திரமாகத் தந்தவர் மெய்கண்டார். அவரே சூத்திரங்கள் பன்னிரண்டிற்கும் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு எனத் தருக்க சாத்திரமுறைப்படி உரை தந்துள்ளார். அவ்வுரை எளிதிலே கற்றோர்க்குமே விளங்காது என்பதனால் பலர் உரை எழுதியுள்ளனர்.

அவர்களிலே சிவஞான முனிவர் சிற்றுரை பேருரை என இரு உரைகள் செய்துள்ளார்.

மெய்கண்டாரின் முதல் மாணவர் அருள் நந்தி சிவாசாரியர் சிவஞான போதத்திற்கு செய்யுளிலே உரையாகச் சிவஞான சித்தியார் என்னும் நூலைத் தந்துள்ளார். அதன் சுபக்கத்திற்குச் சிவஞான முனிவர் உரை எழுதியுள்ளார். நம் நாட்டவராகிய திருவிளங்கதேசிகர் மற்றும் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் ஆகியோரும் உரை செய்துள்ளனர்.

சமய குரவர் நால்வர் சந்தானகுரவர் நால்வர். பன்னிரண்டு திருமுறை செய்தவர்கள் பற்பலர். சைவசமய நாயன்மார் அறுபத்து மூவர். கந்தபுராணம் தந்த கச்சியப்பசிவாசாரியர் திருவிளையாடற்புராணம் தந்த பரஞ்சோதி முனிவர், பெரிய புராணம் அருளிய சேக்கிழார் சுவாமிகள் மற்றும் தாயுமானசுவாமிகள் நாவலர் போன்ற பற்பல மாபெரும் சிவஞானிகளால் கட்டிக் காத்த சமயம் சைவசமயம், அதனை அதன்படி அநுட்டித்து இம்மையிலும் மறுமையிலும் பேரின்பம் பெறுவோமாக. சைவசமயத்தைப் பாதுகாப்போமாக. ஏனைய சமயங்களை அன்புடன் நோக்குவோமாக. அன்பேசிவம். சர்வம் சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானப்பிரகாசசிவம்
முதல்வர், இலங்கை மெய்கண்டார் ஆதீனம்

உ

சிவமயம்

# சைவ இலக்கியத்தின் தூக்க நிலை

(வித்துவான், சைவப்புலவர்கள் க.கணபதிப்பிள்ளை B.A)

அமிழ்தினும் இனிய மொழி நம் தமிழ்மொழி. தமிழில் இனிமைக்குக் காரணம், அன்புமயமாய் அது விளங்குவதே. அன்பே சிவம் என்பது ஆன்றோர் முடிபு. அன்புத்தமிழ் சிவசம்பந்தமானது, தெய்வமயமானது. அன்பு வழியிற் சிவமாகிய பேரின்பப் பொருளை அடையத் தமிழ் நமக்குக் கிடைத்ததோர் அருந்துணையாகும். தமிழிலின் இலட்சியம் - இலக்கியம். இதுவே. அன்பை வளர்க்காத, அறத்தைப் பேணாத, வெறும் ஆசாபாசங்களை அடிப்படையாகக் கொண்ட தமிழ், இலக்கியத் தமிழுமன்று இலட்சியத் தமிழுமன்று இதுபற்றியே.

> "என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
>
> -திருமந்திரம்

என ஓர் அருந்தமிழ்ப்புலவர் அறை கூவினார். தண்டமிழ்ப் புலவர் பலரும் இறைபுகழ் பாடுவதே இலக்கியப் பொருளாகவும், தமிழ்ப் பணியாகவும் கைக்கொண்டனர், சைவச் சான்றோர்களும் வேறுசமயப் பெரியோர்களும் தமிழை இதன்பொருட்டே பெரிதும் பயன்படுத்தினர். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரத்தை ஒரு தடவை மேலெழுந்தவாரியாக நோக்கினால் இவ்வுண்மை தெளிவாகப் புலனாகும்.

ஆனால் இன்றைய தமிழ் இலக்கிய உலகம் இப்பண்பை எத்துணையளவு பேணுகின்றது என்பதை நாம் கவனிக்கும் போது, சமய இலக்கியம் நவீன தமிழ் இலக்கியக்காரர்களாலும், விமர்சகர்களாலும், வரலாறு எழுதுபவர்களாலும் ஒருங்கே புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வழி வழி மரபைத் தழுவிப்பேணி - ஓர் எழுத்தாளன் இன்று சமய இலக்கியம் படைப்பானாயின் அவனைத் தமிழிலக்கியவுலகம் மாற்றாந்தாய்ப் பார்வையோடு நோக்குகின்றது. இதனாலேயே அருந்தமிழுக்கு அணிகலமாகவும் நம் சமயத்திற்கு அரணாகவும் இருக்க வேண்டிய அநேக நூல்கள் இன்று எம்மிடையே இல்லாமல் மறைந்து கொண்டிருக்கின்றன. ஈழநாட்டிலே தோன்றிய சமய நூல்கள் எங்கே? அவற்றின் பெயரையாவது நாம் முற்றும் அறிவோமா எனக் கேட்க வேண்டிய தருணம் இன்று எழுந்துள்ளது. சமீப காலம்வரை வாழ்ந்து சைவ இலக்கியப்பணி செய்தவர்

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார். 50 ஆண்டு காலம் இடையறாத் தெய்வப்பணி செய்த உத்தமர். இவர் தம் நூல்கள் இன்று நம் கலாபீடங்களை அணிசெய்கின்றனவா, பொது நூல் நிலையங்களில் இடம் பெறுகின்றனவா?

காசிவாசி செந்திநாதையர் நாவலர் பெருமானின் வாரிசு. இவர்களைப் போன்ற சித்தாந்த வித்தகர் ஒருவரைத் தென்னாடே கண்டிலது. இவர்களின் நூல்களை ஈழநாட்டார் கற்கச் சந்தர்ப்பம் கிடைக்காவிடினும், காணும் பேறாவது இன்று கிடைக்கின்றதா? சைவ இலக்கியம் என்றதுமே ஆங்கிலத்திலே சேர்.பொன். அருணாசலம் போன்றோர் எழுதிய நூல்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. சமய இலக்கியத்தோடு சமய வரலாறும் இணைந்து செல்வதையும் நாம் உணருகின்றோம். இதற்கு நாயன்மார் அருட்பாடல்களும் அவர்தம் வரலாறும் ஒன்றாக இணைந்திருப்பதும் தக்க சான்றாகும். பெரிய புராணம் மற்றோர் சான்று. தமிழிலே சைவ இலக்கியம் இன்று புறக்கணிக்கப்பட்டதுபோல் என்றுமே புறக்கணிக்கப்படவில்லையெனத் துணிந்து கூறலாம். இப்புறக்கணிப்புக்கு முக்கிய காரணம் சிறுகதை வளர்ச்சியே! சிறுகதை தக்கதோர் இலக்கிய உத்தியென்பதில் ஐயமின்று. ஆனால் இன்று தமிழிற் சிறுகதை தேவையின்றிப் பெருகிவிட்டது. தமிழ் மரபுக்கும் இலக்கிய நோக்கத்திற்கும் முரணான சிறுகதைகளோ அளப்பில. இதனாற் சமுதாயம் பெலவீனமடைந்து வருகின்றது. அருந்தமிழ்ப் பண்புகள் சில ஆட்டங்கொடுக்கும் நிலைமையடைந்தமைக்குச் சிறுகதை இலக்கியம் ஓரளவு காரணமாகும். சிறுகதை சமயத் தொடர்பிலே இன்னும் நன்கு வளரவில்லை. வளரவேண்டியது அவசியமாகும்.

நாவலர் பெருமானை நாம் சிரமேற் போற்றுகின்றோம். அவர் தமது வாழ்வைச் சிறப்பாகச் சைவ சமயத்திற்காகவும் பொதுவாகத் தமிழுக்காகவும் அர்ப்பணித்தார். சைவ இலக்கியத்தைப் பேணுவதே அவர் மூச்சு - பேச்சு. இதனை வரலாறு உணர்ந்தார் நன்கு அறிவர். ஆனால் இன்றோ நிலைமை வேறு, முழுமாறு பிரசார நோக்கத்தினால் தமிழே அவர் பேச்சு - மூச்சு எனக்கூறி அவர்தம் சமய இலக்கியப் பணியை மூடி மறைக்கின்றார்கள் சிலர். இந்நிலைமைக்குக் காரணம் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற் புகுந்து இடம்பிடித்துள்ள சிறுகதை விமர்சன மணிகளின் தான் தோன்றித்தனமே இவர்கள். கையிலே பாடப்புத்தகம் எழுதுபவர் தாமும் எளிதில் இலக்கிய எழுத்தாளர்களாகி விடுகின்றனர். ஆனால் ஐம்பது ஆண்டுகளாகத் தமிழை அன்புருவிற்கண்டு சிவமயமாக்கி இலக்கியப்பணி செய்பவர்க்கே இடம் இராது, காரணம் நாவலர் வழியில் வாழையடி வாழையாக வந்த சைவ இலக்கிய நெறியைக் கடைப்பிடித்தமைபோலும்.

இலக்கியத்திற்கு நேரே வழிகாட்டி, பேரின்பப் பெருவாழ்வை இவ்வுலகினருக்குக் காட்டும் ஒரேயொரு இலக்கியவகை, சமய இலக்கியமே. இது சைவ உலகிற் புகுந்து இடம் பிடித்துள்ள சிறுகதை விமர்சன மணிகளின் தான்தோன்றித்தனமே. இவர்கள் கையிலே பாடப்புத்தகம் எழுதுபவன் தாமும்

எளிதில் இலக்கியமாகவோ, கிறித்தவ இலக்கியமகவோ, இசுலாமிய இலக்கியமாகவோ இருக்கலாம். இதனை அன்பும் நடுநிலைமையும் உடைய உள்ளத்துடன் நாம் அணுகுகின்றபொழுது எளிதில் உணர்கின்றோம். ஆகவே நம் சைவ உலகமே! தமிழ்கூறும் நல்லுலகமே! உனது நூல் நிலையத்தை ஒரு தடவை நிமிர்ந்து பார்! அங்கே அன்றைய குகதாசர் சபாரத்தின முதலியார் எழுதிய நூல்கள் இருக்கின்றனவா என ஒரு தடவை தேடு? அவையில்லாவிடின் இன்றைய நூல்கள் தாமும் உளவா எனத் தேடிப்பார்! உண்மை தெரியும். இன்று நம் சமய இலக்கியம் செல்லாக்காசாகிவிட்டமை தெரிகின்றதல்லவா? உறங்கிக் கிடக்கும் சைவஇலக்கிய உலகமே! விழித்தெழு, உண்மையை யோசி, நீ, நாவலன் மரபில் - ஞானசம்பந்தர், மரபில் - அருணகிரிநாதர் மரபில் உதித்தமையை மறந்துவிடாதே! அன்று நீ கந்தபுராணத்தைப் போற்றினாய். அதனால் வாழ்ந்தாய். இன்றும் வாழ்கின்றாய் இலட்சியமில்லாச் சிறுகதையை நம்பி வாழாதே! இது இருள், மருள், சமய இலக்கியமே இவ்வுலகில் மெய்ப்பொருள் பேரின்பம் காட்டுவது என்பதை மறவாதே! பாரதியும் சமய இலக்கிய கர்த்தா என்பதைச் சிலர் மறைக்கலாம். நீ மறவாதே! திருஞானசம்பந்தரும், சுந்தரரும், ஈழத்துச் சைவ இலக்கியம் படைத்தனர். ஈழத்து மண்டோதரியின் சைவப் பற்றைப் போற்றினார் மாணிவாசகர். இவை உன் உன்னத நிலையை உனக்கே உரைப்பன. ஆகவே இன்னுமேன் தூக்கம்! சென்றிடுக எட்டுத்திசையும் நின்புகழ். அதற்கு அடிப்படையாக ஈழத்துச் சைவ இலக்கிய மன்றம் இன்றே உதயமாகுக.

ஈழத்துச் சைவ இலக்கிய மன்றமே! இன்றே ஈழத்துச் சைவ இலக்கிய நூல்களை ஒன்று சேர், கண்டுகளி! சற்றே படித்துப் பார்.

இன்றே சைவ இலக்கிய கர்த்தாக்களின் வரலாற்றை வரை, விமர்சனம் செய்,

இன்றே ஈழத்துச் சைவத் தொண்டர், கோயில் வரலாற்றை எழுது, அதன் ஒளிநிழலில் உயிர்பெற்று வாழ்.

இன்றே ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் உனக்குரிய தலைமைப்பீடத்தை அமை, அதனால் தமிழ் அன்பாகிச் சிவமாவதை அனைவர்க்கும் காட்டு.

ஆனால் ஒன்றைமட்டும் அடிமனசில் வைத்துக்கொள், உனக்குத் தமிழுடன் உள்ள அன்புரிமையளவு ஏனைய சமய இலக்கியங்கட்கும், இலக்கிய வகைகட்கும் உண்டு என்பதை எட்டுணையும் மறந்துவிடாதே!

வணக்கம், வாழ்த்து (இந்துசாதனம் 26 – 11 – 1965)

சிவமயம்

# மெய்கண்டார் ஆதீனம் பற்றி 1996 இலே எழுதியது

சிவநெறிச் சான்றோரே, சிவ பரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் எங்கள் சைவசமயம். ஏனைய தெய்வங்களையும் உள்ளடக்கியது. பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், சித்தர் திருப்பாடல்கள், வேத சிவாகம புராணங்களை அடிப்படை நூல்களாகக் கொண்டுள்ளது நம் சமயம்.

திருமுறைகள் இலக்கியம், தோத்திர வடிவிலான அன்புசார் பக்திப்பாடல்கள். சாத்திர நூல்கள் இலக்கணம் தருக்க முறைப்படி அமைந்த அறிவுசார் ஞான நூல்கள் சித்தாந்த சாத்திர நூல்களைத் தமிழகத்திலிருந்து வருகை தந்த பேரறிஞர்கள் அவ்வப்போது போதித்தார்கள். இலங்கையிலேயே எமது காலத்திலே முதன்முதல் நிறுவப்பெற்ற நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் சைவசித்தாந்த நூல்களை முறையாகப் போதிக்க ஒருவரை நாடியது. அப்பொறுப்பினை ஏற்று ஆதீனத்தின் முதலாவது மகாவித்துவானாகியப் போதனை செய்யும்போது செய்யும் பேறு நமக்குக் கிடைத்தது. கடைசியாகப் போதிக்கும் பேறும் ஏற்பட்டது.

காஞ்சி மெய்கண்டார் ஆதீனப் பரமாசாரிய சுவாமிகள் 1972ம் ஆண்டு கொழும்பிலே சித்தாந்த போதனை செய்தார்கள். எம்மிடம் போதனை பெற்றுக் கொண்டிருந்த சிவத்திரு இராசசிங்கம் என்னும் பெருமகனார் பரமாசாரிய சுவாமிகளிடம் போதனை பெற எமது அனுமதியைக் கேட்டார். “யானோ அடியார்க்கு அடியவன். அவர்களோ குருமகாசந்நிதானம். அவர்களிடம் போதனை பெறுவது மிகப் பொருத்தமானது” எனக் கூறலானோம்.

சுவாமிகளின் போதனையைக் கௌரவிக்கச் சென்றபோது அவர்கள் எம்மை நோக்கி “இங்கே மெய்கண்டார் பெயரில் ஓர் ஆதீனம் தேவை. அதன் பொறுப்பினை ஏற்குக” என்றார்கள். கூடி இருந்த அன்பர்கள் எமது குடும்பப் பொறுப்பினை எடுத்துக் காட்டினர். காரைநகர் சிவதொண்டர் அவர்கள் பொறுப் பேற்றுச் ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளானார்கள். தாம் நிகழ்த்தும் உரையரங்குகளிலே நாமும் பேசுதல் வேண்டும் எனப் பல தடவை அழைத்தார்கள். ஈற்றில் ஆதீன மகாவித்துவானாய் சைவ சித்தாந்த போதனை செய்தனம். ஆசிரியர் இடமாற்றம் ஏற்பட்ட போதிலும் சனி, ஞாயிறுகளில் சித்தாந்த போதனைகள் வேலணை முருகன் திருக்கோயிலிலும் கந்தர்மடம் சிவகுருநாத பீடத்திலும் தொடரலாயின.

சைவப் பாதுகாப்புச் சேவை என்ற பெயரிலே தருக்க அடிப்படையிலான எழுத்துப் பேச்சுப் பணிகளும் மற்றும் செயற்பாடுகளும் நிகழ்ந்தன. 1990 இல் மெய்கண்டார் ஆதீனச் சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்கள். ஆதீனப் பொறுப்பை ஏற்கும்படி அன்பர் ஒருவர் யாம் நிறுவிய சைவசித்தாந்த உயர்நிறுவனப் பேரவையிலே பகிரங்க வேண்டுகோள் விடுத்தனர். பத்திரிகைகளிலே பகிரங்க வேண்டுகோள் விடுத்தோம். எவரும் பொறுப்பை ஏற்க முன்வரவில்லை. எம்மையே பொறுப்பு ஏற்குமாறு பலரும் வற்புறுத்தினர். சிவநேசச் செல்வர்கள் பலரும் பலவாறு உதவி செய்தனர். ஐந்து ஆண்டுகள் எமது பொறுப்பில் மெய்கண்டார் ஆதீனம் சிறப்பாகச் செயற்பட்டது. நாயன்மார் குருபூசைகளைக் கொண்டாடிய ஒருசில நிறுவனங்களிலே ஒன்றாகவும் சைவசித்தாந்த போதனை நிகழ்த்துவிக்கும் தாபனமாகவும் கிடைத்தற்கரிய அரிய நூல்களைப் பாதுகாத்து விளக்கம் கூறும் அமைப்பாகவும் யாழ்ப்பாண நகரிலே ஆதீனம் செயற்பட்டது. அதேவேளை எமது உடல்நிலை தளர்ச்சி நாடோறும் ஏற்பட்டது. இடப்பெயர்வும் ஈற்றிலே ஏற்பட்டது.

எனவே கொழும்பு மாநகரிலிருந்து பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்ய முயன்றோம். சில சபைகளுக்கு எழுதினோம். மௌனம் சாதித்தன. இவ்வாண்டு ஆதீனத்தின் வெள்ளிவிழா ஆண்டு, ஆதீனம் மேலும் நிலைபெறத் தக்கார் ஒருவர் தலைமைப் பொறுப்பினை ஏற்றல் வேண்டும்.உடற்றளர்ச்சி மிகுந்துள்ளது. தற்காலிகமாக வவுனியாவிலே தங்கியுள்ளோம். குடா நாட்டிலே திருஞானசம்பந்தர் ஆதீனம் சேவை செய்வதனால் குடாநாட்டிற்கு வெளியே இந்த ஆதீனச் சேவை நிகழ்வது பொருத்தமாகும்.

எனவே மெய்கண்டார் ஆதீன அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்பச் சேவை செய்யவல்ல ஒருவரை ஆதீனமுதல்வராக அனைத்துச் சைவப் பெருமக்களும் மன்றங்களும் உதவும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

எமது இன்றைய முகவரி

**முதல்வர், மெய்கண்டார் ஆதீனம்**
**101, அம்மன் வீதி, பண்டாரிகுளம், வவுனியா.**

உ

சிவமயம்

# சிவஞான நெறியிலே ஜனநாயகமும் சோசலிஸமும்

"ஜனநாயகம், சோஷலிஸம் என்றால் ஒருசில சமயவாதிகள் வேதத்திலே, ஆகமத்திலே இல்லாத பயங்கரபூதம் என எண்ணுகிறார்கள். அதேபோல சைவம் என்றால் சோஷலிசத்துக்கு ஒத்துவராது என்று வேறு சிலர் நினைக்கின்றார்கள். முன் இல்லாதது பின் தோன்றாது என்பது சைவசித்தாந்தங் கூறும் சற்காரியவாதம் வேதத்திலும், ஆகமத்திலும் சனநாயக சோஷலிசக் கருததுக்கள் நிறையவுண்டு" என்பதே எனது பேச்சின் பத்திரிகைப்பகுதி.

பத்திரிகையாளர் அளித்த தலைப்பே "ஜனநாயகமும் சோஷலிஸமும் சிவஞான நெறியே" என்பது. பேச்சுப்பகுதி எது, பத்திரிகைத்தலைப்பு எது எனப் பகுத்துணராத அன்பரொருவர் குறித்த வாக்கியம் என்னாற் பேசப்பட்ட தெனக் கொண்டு இந்து சாதனத்தில் எழுதியமை அநுதாபத்திற்குரியது.

எங்ஙனமாயினும் பத்திரிகைத் தலைப்பு மிகப் பொருத்தமாகவே அமைந்துள்ளது. ஏனைய சமயத்தவர்கள் தத்தம் சமயத்திலே சோஷலிசக் கருத்துக்கள் உண்டெனப் பத்திரிகைகள் மூலம் ஏற்கனவே பகிரங்கஞ் செய்து தம் சமயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்திபாரமிட்டு விட்டனர்.

நமது எதிர்கால அரசியற்றிட்டம் சோஷலிச சனநாயகக் கொள்கைகளின் அடிப்படையிலே அமைவதை எல்லாக் கட்சிகளுமே ஏற்றுள்ளன. இந்நிலையில் இக் கொள்கைகள் சைவத்திலும் இடம் பெற்றிருப்பதைக் காட்டாவிடின் சைவசமயந் தளரவும் நாத்திகம் ஓங்கவுமே வழிவகுத்தவர்களாவோம்.

கடிதர் பாரதி பாடலைப் படித்திருப்பாராயின் எமது கருத்தை மறுத்துரையாமற் பாரதியாரைச்சாடும் பணியைப் பூண்டிருப்பார். மானிய பிரபுத்துவ தனியுடைமைக் கொடுங்கோலாட்சி நடாத்திய இரஷிய சார் அரசனை வீழ்த்திப் பொதுவுடைமை எழுந்த பொழுது பாரதியார், அது ஆதிபராசக்தியின் அருட்செயலென வாழ்த்தலானார்.

ஏதேச்சாதிகாரத்துக்கும், கொடுங்கோலுக்கும் தனியுடைமைக்குமே உரித்தான சமயம் சைவசமயம் என்னும் எண்ணம் உயர்கல்வி கற்ற இளஞ் சைவர்களிடையே வளர்ந்து வருவதுமின்றிச் சைவத்தைப் பலவாறு நலிவடையவுஞ் செய்கின்றது. அதனை அநுபவமூலங் கண்டு சைவசமயம் சனநாயகத்திற்கும் சோஷலிசத்திற்கும் மாறான ஏதேச்சாதிகாரர் சமயமன்று எனக் காலந்தோறும் சுட்டிக் காட்டுவதனை ஒரு பெருஞ் சைவத் தொண்டாகக் கருதிப் பலவாறு செயலாற்றி வரலானேன்.

1959 இலே பல்கலைக்கழகத்திலே சில ஆண்டுகளாக வெளிவராமல் முடங்கிக் கிடந்த இந்து தருமத்தை வெளியிடுஞ் சந்தர்ப்பம் கிடைத்தது. சைவம் சனநாயகத்திற்கும் சமவுடைமைக்கும் விஞ்ஞானத்திற்கும் மாறான மூட நம்பிக்கைகளைக் கொண்ட சமயம் என்னும் கொள்கை வலுப் பெற்றமையே, இந்துதருமம் முறையாகப் பிரசுரிக்கப்படாமைக் காரணங்களுள் ஒன்றாகும். இதற்குச் சான்று 1959 ஆம் வருடத்திய இந்து தருமத்திலேயேயுண்டு.

பின் தொடர்ந்து வெளிவந்த "இந்து தருமம்" ஒன்றிலே சைவராகப் பிறந்தும் சுறுசுறுப்புமுடைய விரிவுரையாளர் ஒருவர், சைவத்திலும தமிழிலும் சோஷலிசத்திற்கு மாறான ஏகாதிபத்திய பிற்போக்கான கொள்கைகட்கு வழி வகுத்வர் எமது சந்தான குரவராகிய மெய்கண்ட தேவநாயனாரேயென ஆராய்ச்சிக் கட்டுரையொன்றிலே வரையலானார். அதனால், நமது நாயன்மார்கள் அக்காலத்திலேயே சோஷலிசத்தை மெய்ஞ்ஞானத்துடன் ஊட்டலானார்கள் எனும் கொள்கையைப் பரப்பும் எண்ணம் வலுப்பெற்றது.

"அறஞ் செய விரும்பு" என எமது கல்வியைச் சோஷலிசக் கொள்கையுடன் தொடக்கி வைத்தார். ஔவைப் பிராட்டியார். மகேசுர பூசைக்கும் சோஷலிசஸத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கோயில் விழாக்களும் அத்தகையவே.

கல்லிலே மண்ணிலே பொன்னிலே பெண்ணிலே கலையிலே ஒலியிலே சிவனைக் காட்டும் நம் அரிய சமயம் சோஷலிச சனநாயகத் தொடர்பிலே சிவஞானத்தைக் காட்டதா?

"எவ்வுயிரும் உறை இறை சிவனென்று இரு" என்பது சைவசமய நெறியன்றோ.

காலஞ்சென்ற நீதியரசர் சைவசிகாமணி ஸ்ரீ ஸ்கந்தராசா தம்பதிகள் ஏற்கும் வண்ணம், சென்ற நூற்றாண்டில் ஐரோப்பியர் மேற்கொண்ட வலுவேறாக்கற் கொள்கை திருக்குறிளிலே காணப்படுகின்றமையை எடுத்துரைத்தது போலச் சைவசமயம் சனநாயகசோஷலிச மயமானது என்பதனை எடுத்துக் காட்டுவது மாபெருஞ் சைவசமய சேவை என்றே கருதுகின்றேன்.

குறித்த இந்துசாதனத்திலே விஞ்ஞானத்தோடும் பிற சமய கலாசாரத் தோடும் சைவத்தை இணைத்துக் காட்டும் உரைப்பகுதிகள் பல காணப்படு கின்றமையைக் கடிதர் கண்டு தமது பிற கருத்துக்களின் பொருத்தத்தைத் தாமே உணர்வாராக.

இங்ஙனம்
க.கணபதிப்பிள்ளை
நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மகா வித்துவான்

# குற்றாலக் குறவஞ்சி

**(இலங்கை வானொலிப் பேச்சு - 9 - 5 - 1963)**

**(வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை B.A)**

தமிழ் மொழிக்குரிய சிறப்பியல்புகளில் தலையானது பொருளிலக்கண மரபு. இது நிலத்தை நானிலமாக வகுத்தது. அதில், குன்று சூழ் மலைநாடு குறிஞ்சி. தலைவன் தலைவியர் அன்பாற் கூடல் அந்நில ஒழுக்கம். இறையும் உயிரும் அன்பு செய்யக் கூடுவதே குறிஞ்சி நிலக் குறிப்பொருள் - மெய்பபொருள் குறமகள் வள்ளியும் குமரவேளும் இதனாலன்றே குறிஞ்சி நிலத்திற் குறிஞ்சி செய்தனர். குறிஞ்சி செய்தல். கூட்டஞ் செய்தல். ஐம்புலவேடரிடம் அகப்பட்ட ஆத்மாவை இறைவன் குருவாய் வந்து கூட்டஞ் செய்யும் சித்தாந்த மரபு இதனோடு ஒப்பிடற்பாலது.

குறவஞ்சி இலக்கியத்தில் குறிஞ்சி நிலக்குறத்தி ஒருத்தி வருகின்றாள் வஞ்சிககொடி போன்றவள் ஆகவே அவள் குறவஞ்சி கல்வியறிவுவற்றள் கலையறிவு பெற்றவள். குறி சொல்லல் அவளின் குலத்தொழில். குறவஞ்சியில் தலைவிக்குக் குறிசொல்லுகின்றாள். தலைவிக்கு மட்டுமா அவள் குறி கூறுகின்றாள். குறிஞ்சி நிலப்பேரின்பப் பொருளாகிய இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையை அல்லவா அவள் குறியாக யாவர்க்குங் கூறுகின்றாள். ஆகவே அவள் குறத்தி அல்லள் குரு - குறிஞ்சிநிலம் அவளுக்கு அளித்த சீதனத்தின் விளைவு இது.

குறவஞ்சியில் இரண்டு காதல் நிகழ்ச்சிகள் வருகின்றன. ஒன்று பாட்டுடைத் தலைவன் மீது தலைவி கொள்ளுவது மற்றென்று குறத்தி மீது குறவன் கொள்ளுவது முன்னது பேரின்பம் கொள்ளத்தக்கது. பின்னது சிற்றின்பம் தள்ளக்தக்கது இரு சிறுகதைபோன்றவை இவை இரண்டும் ஒரு தலைக்காமம் பற்றியவை. ஆகவே கைக்கிளை. உண்மைப் பொருளை அடைய உயிர் பக்குவப்படும். நிலையைக் காட்டுவதே கைக்கிளையின் மெய்ப்பொருள் இதுவே, குறவஞ்சியின் முதற் பகுதி. முக்கிய பகுதி. இங்குத்தான் நம் குறத்தி குறி சொல்ல வருகின்றாள். குறிஞ்சி நிலக்குறத்தி குறிஞ்சிப்பொருளை நேரடியாக உரையாது. கைக்கிளை மூலம் உரைப்பது பிற்காலத் திணைமயக்கத்தின் பாற்படும்..

நிலத்திலே குறிஞ்சிபோலத் தலத்திலே சிறந்தது குற்றலம். குறுமுனிவன் தமிழ் உரைத்த குன்று பொதிகைமலை. அதன் ஒரு பகுதி திரிகூடமலை

அங்கு அமைந்திருப்பதே திருக்குற்றலம். அது அழகுத் தென்றலோடு அருவிப் புனல் பாயுமிடம் உடலோடு உள்ளமும் குளிருமிடம் மலைமகள் மார்பின் மணிமுத்தார அருவிகள் பாயுமிடம் தேவார திருவாசகத்தில் இடம்பெற்ற இடம் தென்றலின் பிறப்பிடம் தீந்தமிழின் தாயகம். குற்றலம் என்றால் - குதூகல உணர்ச்சி எவர்க்கும் ஏற்படும்.

'கொல்லை முல்லை மெல்லரும் பீனும் குற்றலம்''

''கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றலம்''

என்கின்றார் சம்பந்தர் சுவாமிகள் இத்தகைய குற்றலத் தளத்தின் மீது குறவஞ்சி பாடியவர் திரிகூடராசப்பகவிராயர். அவர் குறிஞ்சி நிலத்தவர் குற்றலத்தை அடுத்தவர் மேலகரம் அவரூர் குற்றலக் குறும்பலா வீசரே அவரின் குலதெய்ம் அழகு சொட்டும் அருமருந்தன்ன புராணம் ஊடல் முதலாம் பதினான்கு நூல்களைக் குற்றல் நாதர் பேரில் இயற்றியவர். 250 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். நாயக்கர் காலத்தைச் சார்ந்தவர். மதுரைச் சொக்கநாத நாயக்கரிடம் குறவஞ்சிமேட்டை முற்றூட்டாகப் பெற்றவர்.

நாயக்கர் காலத் தமிழ் இலக்கியம் பழமையைப் போற்றுவது எளிதற் பொருளறிய முடியாத திரிபு மடக்கு முதலாங் கவிகளைக் கொண்டது பொதுமக்களைப்பற்றிச் சிந்தியாதது. இத்தகைய காலப் பிற்பகுதியில் ஆற்றல் வாயந்த புலவர் சிலர் தோன்றலாயினர். மக்கள் மன்தைக்கவரக்கூடியதும் வாழ்க்கையோடு தொடர்புடையதும் எளிதில் எவர்க்கும் விளங்கக்கூடியதும் இயல், இசை நாடகப் பண்பு வாய்ந்ததுமாகிய குறவஞ்சி பள்ளு முதலாம் புதிய பிரபந்தங்களை அவர்கள் இயற்றத் தொடங்கினர். இதனால் தமிழைப் பிடித்த இருள் படிப்படியாக விலகியது. தமிழுக்கு ஒளியூட்டிய முன்னணி வீரரில் நம் கவிராயர் தலையானவர். உணர்ச்சி வேகம், கற்பனை வளம், இன்னோசை, சந்தர்ப்பத்திற்கேற்ற சந்தம் உயர்ந்த குறிக்கோள் செறிந்தபர்களை அளித்த அபிநவ கவிநாதன் இவர். இப்பண்புகளைக் குற்றலக் குறவஞ்சியின் அடிதோறும் காண்கின்றோம்.

''பூமலி இதழி மாலை புனைந்த குற்றலத்தீசர்'' எனத் தொடங்கும் விநாயகர் வணக்கத்துடன் நூல் ஆரம்பமாகின்றது. விநாயகரை வாழ்த்த வந்தவர் குற்றலத்தீசரை அல்லவா முதலிற் குறிப்பாகக் குறிப்பிடுகின்றார்.

மாணிக்கவாசக சுவாமிகளின் வணக்கத்தில் ''இத்தரையில் ஆத்துமம் விட்டிறக்கு நாட்சிலேட்டுமம் வந்தேறா வண்ணம் பித்தனடித் துணை சேர்ந்த வாதவூரானடிகளை பேணுவோமே'' என்கின்றார். இதில் உலகியலறிவு, புலமை வளம், வியப்புணர்ச்சி, பக்திச் சுவை, கற்பனை நயம், ஓசையின்பம், யாவும் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். புதுவகை வணக்கப்பாடல்களை இவ்வாறு

பாடியுள்ளார். அவையடக்கத்தை அடுத்துக் கட்டியக்காரன் வருகையோடு "நூல்" பகுதி ஆரம்பமாகின்றது. இயற்றமிழ்ச் செய்யுள் நடையில் ஆரம்பித்த குறவஞ்சி, பழைய காலக்கூத்து நாடகப்பாணியைக் கட்டியக்காரன் வருகையால் அடைகின்றது. இதை அடுத்துத் தோடி இராக, சாப்புத்தாள இசைப்பா தொடர்கின்றது. நூல் முத்தமிழ் மயமாகின்றது. முத்தமிழ்ப் பெரும் காப்பியமாகிய சிலப்பதிகாரம்போல "முத்தமிழ்ச் சிறு காப்பியம்" குறவஞ்சி. "மேற்கெழுந்த மதிசூடிக் கிழக்கெழுந்த ஞாயிறு போல"க் குற்றால நாதர் உலா வருகின்றார். அண்டர் கூட்டம், அசுரர் கூட்டம், தொண்டர் கூட்டம், முனிவர் கூட்டம் யாவும் புடை சூழ்கின்றன. குபேரன் முதலாம் தேவர்கள் புகழ்பாடுகின்றனர். தேவமங்கையர், குழல்வாய் மொழியம்மையும் கூட வருகின்றாள். பவனியின் ஒவ்வொரு அசைவையும், நெளிவையும் சந்தப்பாமூலம் படம் பிடித்துக் காட்டுகின்றார் புலவர்.

குற்றால நாதரின் குரவைக் கூத்தாடுகின்றனர். பவனியைக் காண ஓடோடி வருகின்றார்கள் பெண்கள், அவர்கள் வேடிக்கைப் பிரியர்கள் அல்லவா? ஒரு கைவளை பூண்டோர் ஒரு கைவளை பூண மறந்தோடி வருகின்றார்கள். ஒரு கண்ணுக்கு மைதீட்டியோர் மறு கண்ணுக்கு மை தீட்டாமல் பறந்தோடி வருகின்றார்கள். இவர்கள் செயல் கம்பராமாயண உலாவியற் படலத்தை ஞாபகஞ் செய்கின்றது.

அப்பொழுது, "மனமுந்தியதோ விழி முந்தியதோ கரமுந்தியதோ எனவே உயர் சந்திர சூடர் குறும்பலாசுரர் சங்கணி வீதியிலே மணிப்பைந்தொடி நாரி வசந்த ஒய்யாரி" பொற்பந் தடிக்கின்றாள், அவள்தான் நம் கதாநாயகி, வசந்த வல்லி!

உலாவரும் திரிகூடநாதரைக் காண்கின்றாள் அவள். தாள் + தலைப்படுகின்றாள். தாடலையாகின்றாள் ; தன்னை மறக்கின்றாள் தன் நாமம் கெடுகின்றாள்; மனங்கொண்டாள்; மயல் கொண்டாள் என்பது நம் கவியரசர் வாக்கு. தலைவியின் நிலைகண்டு தோழிமார் புலம்புகின்றனர் ; சந்தனக் குழம்பைப் பூசுகின்றனர் விசிறியால் வீசுகின்றனர். வாழைக் குருத்திற்கிடத்துகின்றனர் நொடிப் பொழுதில் எத்தனையோ வகைச் சிகிச்சைகள் நடந்தேறிவிடுகின்றன ஒரே அமளிதுமளி நிலை.

சற்றில் ஒருவாறு மயக்கம் தெளிந்து எழுந்து விடுகின்றாள். வசந்தவல்லி. குளிர்ந்த நிலா அவளுக்கு வெப்பமாக இருக்கின்றது. நிலவை, தென்றலை மன்மதனைப் பழிக்கின்றாள்.

"தண்ணமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே! அந்தத்
தண்ணளியை ஏன் மறந்தாய் வெண்ணிலாவே!
பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே! என்றன்
பெண்மை கண்டும் காயலாமோ வெண்ணிலாவே!

என்றும், 'விண்ணிலே நெருப்பை வைத்தாய் தண்ணிலாக் கொடும்பாவி வெண்ணிலாவே! என்றும் கேட்கின்றாள். புலவரின் இதய அநுபவம் தமிழ் ரசமாய் வெளிவருகின்றது சிலம்பு வாசனையும் வீசுகின்றது.

''செய்ய சடையும் திருக்கொன்றை மாலை அழகும் - அவர்
கையில் மழுவும் என் கண்ணைவிட்டகலாவே!''

எனத் தலைவி தன் தோழிக்குத் தன் மனநிலையைக் கூறுகின்ற பகுதி, ஆன்மா இறைவனை அடைய ஏங்கும் ஏக்கத்தை அல்லவா பிரதிபலிக்கின்றது.

''எள்ளளவு ஊனும் உறக்கமும் இல்லாரைக் கண்டு நானும் ஒள்ளிய ஊனும் உறக்கமும் அற்று விட்டேனே'' எனத தலைவி கூறுகின்ற பொழுது நகைச்சுவை, காதற் சுவை, பக்திச்சுவை யாவும் ஒன்றோடொன்று கலந்துற வாடுகின்றன இதுவரை காட்டிய பகுதி குற்றாலநாதரின் உலாவைப்பற்றியது. உலா ஆரம்பகாலத்தில், பெருங் காப்பியத்தின் ஒரு சிறு அங்கமாக இருந்தது. சேரமான் பெருமான் நாயனாரால் தனிப்பட்ட பிரபந்தமாக உருவெடுத்தது. குறவஞ்சியில் ஒரு முக்கிய முன்னணி அங்கமாக விளங்குகின்றது. உலாவின்றேல் குறத்தி குறி சொல்வது இன்றாம். பின் குற்றாலநாதரிடம் தோழியைத் தூது விடுகின்றாள் தலைவி.

''மாதர்கள் விட்ட வண்டுகளும் கிள்ளைகளும்
குற்றாலர் வாசல் தொறும் காத்துக்கொண்டிருக்கும் சகியே''

என அவள் கூறும் பகுதி, உலகுக்கு ஒருவனே நாயகன், ஏனைய உயிர்கள் யாவும் நாயகிகள்தாம் என்பதை அல்லவா எடுத்துக் காட்டுகின்றது. கூடல் இழைத்துப் பார்க்கின்றாள், அப்பொழுது கூடல் வளைக்கரம் அசைய, மாத்திரைக்கோல் ஏந்தி, மணிக்கூடை தாங்கி, குலமணிப்பாசியும் குன்றிமணியும் அணிந்து, நடைக்கொரு குலுக்கு, வெளிக்கொரு பகட்டு, விழிக்கொரு சிமிட்டு, மொழிக்கொரு பசப்பாய் வருகின்றாள் ஒருத்தி. அவள் தான் குறத்தி. மனக்குறி, மெய்க்குறி, கைக்குறி, விழிக்குறி, மொழிக்குறி, எக்குறியாயினும் இமைப்பினுள் உரைப்பவள். குறிசொல்லும் குறத்தியைக் கண்டதும் வசந்தவல்லிக்கு நம்பிக்கையொளி பிறக்கின்றது. உடனே அவள் ''துவளும் இடைத் தவளும் நகைப்பவள் இதழ்த்தையலே! உன் சொந்தமலை, எந்தமலை, அந்தமலை வளம் எனக்குச் சொல்'' என மிகவும் அன்புடன் கேட்கின்றாள். குறத்திக்கு மகிழ்ச்சி பொங்குகின்றது. உடனே அவள்,

''வானரங்கள் கனி கொடுத்து
மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்''

என்றும்,

"கயிலையென்னும் வடமலைக்குத்
தெற்கு மலை அம்மே
கனகமகா மேருவென நிற்குமலை அம்மே"

என்றும், வரும் பாடல்களைப்பாடி இறும்பூ தெய்துகின்றாள். "உன் நாட்டு வளம் எத்தகையது" எனக் கேட்ட பொழுது,

"ஓடக் காணபது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக்காண்பது மின்னார்மருங்கு வருந்தக் காண்பது
சூலுளைச் சங்கு"

என இறை நலமும், இயற்கை நலமுந் தோன்றக் கூறுகின்றாள்.

குறத்தி தன் குறிச் சிறப்பைக் கூறுகின்றபொழுது, புலவர் தம் நன்றி பகரும் கலைச்சிறப்பையும் காட்டுகின்றார். சீனம், சிங்களம், ஈழம், கொழும்பு, வங்காளம் எங்கும் சென்று, தான் பெற்ற விருதுகளை வசந்தவல்லிக்குக் காட்டுகின்றாள் குறத்தி. வசந்த வல்லி கொடுத்த கூழை உண்டபின், வினாயகரை வணங்கி, கும்பம் வைக்கின்றாள். குறளிப் பேய் வந்து அவள் வாயை இடிக்க, பல்லி பகர,

"சிவப்பின் மிக்கான், கழுத்தின்
மேற் கறுப்புமுள்ளான்,
நல்ல மேற்குலத்தான் இந்த
நன்னகர்த் தலத்தான்"

உன் உள்ளத்தில் உறைந்திருக்கின்றான் எனக் குறி கூறுகின்றாள். உண்மையை மறைக்க விரும்பிய வசந்தவல்லி குறியைக் குழப்புகின்றாள். ஆனால், குறத்தி விடவில்லை அவள் மகா கெட்டிக்காரி. "கைந்நொடியில் கொன்றைமாலை உன்னிடம்வரும்" எனக் கூறுகின்றாள். இன்பமேலீட்டால் நிலை தளர்ந்த வசநதவல்லி, உண்மையை ஒப்புக் கொண்டு தன்னிடமிருந்த சர்வாபரணங்களையும் கழற்றிக் குறத்திக்குச் சூட்டிவிடுகின்றாள். உண்மைக்கு மகாவெற்றி கிடைக்கின்றது. குறத்திக்கும் வெற்றி, குற்றால நாதரின் காதலிக்கும் வெற்றி, ஆத்மவெற்றி, இத்துடன் நூலின் பேரின்பக் காதற் பகுதி வெற்றிகரமாக முடிகின்றது.

இதன் பின்னர் வசந்தவல்லியின் பேச்சையும் காணோம், மூச்சையும் காணோம், இறைவனுடன் இரண்டறக் கலந்த ஆன்மாவிற்குப் பேச்சேது, மூச்சேது!

குறவன் சிங்கன் தன் நண்பன் குழுபவனுடன்கூடி, குருவி வேட்டையாடுவதாகப் பொய்கூறி, குவலயம் எல்லாம் குறத்தி சிங்கியைத் தேடி, கும்பகோணம், குருகாவூர், முதலாம் இடமெங்கும் அலைந்து, குற்றாலத்தில் அவளைக் காண்கின்றான். இதற்கிடையில் காதல்வெறி அவனைப் 'பதம் பார்த்து விடுகின்றது. குறி கொல்லிப் பரிசாகப்பெற்ற ஆபரணங்களைக் குறத்தியிடங் கண்டதும், குறவன் தன் உலகியல் அறிவுக்கேற்ப, "இது விரியன் பாம்பா! தவளையா! சிலந்தியா! குண்டலப் பூச்சியா! நாங்கூழா எனச் சேரி மொழியிற் கேட்கும் கேள்வியும் அதற்குச் செந்தமிழ் மொழியில் குறத்தி இறுக்கும் விடையும் விநோத இரசத்தைப் பிழிந்தல்லவா தருகின்றது. "சாயினுமையே, கெம்பா நடையே. போயினுமையே" முதலாம் சேரிச் சொற்கள் இலக்கியத்திற்கு வாசனை ஊட்டவந்திருப்பதைக் காண்கிறோம், பறவைகள் மேயும் வயல்களின் சொந்தக்காரர் பற்றிய விபரம் அக்காலப் பிரமுகர்கள்பற்றி அறிய உதவுகின்றது. குருவிகளைப் பிடித்துத் தாமுண்பதற்குக் குறவன் காட்டும் நியாயம் நகைச் சுவை மிக்கது, சிலேடைப் பொருளில் வரும் பின்வரும் பாடல் நனி சிறந்தது.

"மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ் வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போன நாள் ஆறுநாட் கூடி ஒரு கொக்குப்பட்டது அகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியில் சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்தாமும் கொண்டார் சைவர்தாமும் கொண்டார் தவப் பேறா முனிவரும் ஏற்றுக் கொண்டார். இதைப் பிக்குச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே." (இங்கே குறத்தி - வள்ளி. குறவன் - முருகன். கொக்கு - மா மரமாக நின்ற சூரன். சட்டி - சஷ்டித்திதி. சாறு - திருவிழா.)

தொல்காப்பியம் கூறும் நகைச் சுவை, புலன்பற்றிய இலக்கணம் இங்கே இலக்கியமாகின்றது. எனினும் இரண்டாம் பகுதியான உலகியற் காதற்பகுதி சற்று அலுப்புத் தட்டவே உரைக்கப்படுகிறது. பேரின்பப் பொருளின் உயர்வையும் சிற்றின்பப் பொருளின் இழிவையும் காட்டப் புலவர் கையாண்ட ஒருவகை உத்தி என்றே இதனை நாம் எண்ண வேண்டியிருக்கின்றது.

புலவர் தாமெடுத்துக் கொண்ட கருப்பொருளை ஒரு தடவை உறைப்பாக நூல்முடிவில் கூறுகின்றார்.

"கற்றாத ஊரெல்லாம் கற்ற வேண்டாம புலவீர்!
குற்றாலம் என்றொரு காற் கூறினாற் போதும்"

என்பதே அவர் அருள் வாக்கு.

குற்றாலக் குறவஞ்சி இன்றுள்ள குறவஞ்சிகளின் தலையாயது?. காலத்தால் முற்பட்டது. கலைவளத்தால் மேம்பட்டது நல்லைக் குறவஞ்சி

முதலாம் குறவஞ்சிகட்கு வழிகாட்டி, முத்தமிழ்ப் பேழை ஒருவர் தனித்தோ, பலருடன் சேர்ந்தோ, இயல், இசை, நாடக இன்பத்தை இலகுவாக நுகர நல்வாய்ப்பா யிருப்பது. இலக்கிய வாணர்க்கும், இசை வல்லார்க்கும், நாடக நடன சிரோமணிகளுக்கும் அமிர்த சஞ்சீவி. அற இன்பத்தையும், இறை இன்பத்தையும் அத்திபாரப் பொருளாகக் கொண்டது. தமிழ் பிறந்த குன்றிலே பிறந்து, குற்றாலப் புனலிலே குளித்துத் தென்றலுடன் குலாவி, சிறப்புமிகு குகரம் எனும் எழுத்தாலான குற்றாலம், குறவஞ்சி, குறும்பலாவீசர், குழல்வாய் மொழியம்மை குறிசொல்லல் முதலாம் சொற்களால் புனையற் பெற்ற நூல் வேறு எப்படி இருக்கும்! தமிழ் இன்பவடிவானது, தமிழ் அருள் உருவானது, தமிழ் இறையாக நிற்பது என்பதையல்லவா குறிப்பாகக் காட்டுகின்றது குற்றாலக் குறவஞ்சி.

* * * * * * * * * *

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# மெய்கண்ட தேவ நாயனார் அருளிச் செய்த சிவஞான போதம்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

## 1. பொது இயல்பு

பிரமாண இயல்

முதற் சூத்திரம் (பதி உண்மை)

அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

இரண்டாஞ் சூத்திரம் (பாச உண்மை)

அவையே தானே ஆய்இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

மூன்றாஞ் சூத்திரம் (பசு உண்மை)

உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்ந்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவின்உள் ஆன்மா.

2. இலக்கண இயல்

<u>நான்காம் சூத்திரம் (பசு இலக்கணம்)</u>
அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே

<u>ஐந்தாம் சூத்திரம் (பாச இலக்கணம்)</u>
விளம்பிய உள்ளத்து மெய்வாய்கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமி அருள்
காந்தம் கண்ட பாசாத்து அவையே

<u>ஆறாஞ் சூத்திரம் (பதியின் சொரூப இலக்கணம்)</u>
உணர்உரு அகத்துஎனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்கும் மன்உலகே

2. உண்மை இயல்பு

3. சாதன இயல்

<u>ஏழாஞ் சூத்திரம் (பசுவின் சிறப்பு இலக்கணம்)</u>
யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்துஇலது அறியாது
இருதிறன் அறிவுஉளது இரண்டு அலா ஆன்மா.

<u>எட்டாஞ் சூத்திரம் (குருவுமாய் உணர்த்தும் முறை)</u>
ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவும்ஆய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

<u>ஒன்பதாஞ் சூத்திரம் (ஆன்மா சுத்தி)</u>
ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதி விதி எண்ணும் அஞ்சு எழுத்தே

4. பயனியல்

பத்தாம் சூத்திரம் (பாசநீக்கம்)

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

பதினொன்றாம் சூத்திரம் (சிவப்பேறு)

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

பன்னிரண்டாம் சூத்திரம் (சிவன்முத்தி)

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

**(கருத்துரை, மேற்கோள், ஏது, உதாரணங்களும் உள)**

## சிவஞானபோதம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதி விதி எண்ணும் அஞ்சு எழுத்தே

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

# சிவஞான சித்தியார்

புறச்சமய நெறிநின்றும் அகச் சமயம் புக்கும்
புகல் மிருதி வழிஉழன்றும் புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதசிரப்பொருளை
மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதில் சரியை கிரியை யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.

ஞானநூல்தனையோதல், ஓதுவித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை...

ஞானமதில் ஞானநிட்டை உடையோருக்கு
நன்மையொடு தீமையிலை, நாடுவதொன்று இல்லை,
சீலமிலை, தவம்இல்லை, விரதமொடு ஆச்சிரமச்
செயல் இல்லை, தியானமில்லை, சித்தமலம்இல்லை
கோலமில்லை, புலன்இல்லை, கரணம்இல்லை
குணம்இல்லை, குறிஇல்லை, குலமும்இல்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணம் மருவிப்
பாடலினொடு ஆடல்இவை பயின்றிடினும் பயில்வர்

திருச்சிற்றம்பலம்

ஞானபிரகாசசிவம்
குருமுதல்வர், இலங்கை மெய்கண்டார் ஆதீனம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சிவப்பிரகாச நூற்பிரசுர வாழ்த்து

யாழ்ப்பாணம், நல்லைத் திருஞானசம்பந்தர். ஆதின
மகாவித்வான் க.கணபதிப்பிள்ளை (B.A)
அவர்கள் பாடியது

01. கல்லாலின் புடையமர்ந்து நால்வர்க் கன்று
கற்பித்த மெய்ம்மறையை ஞானத் தேனைச்
சொல்லாமற் சொல்லியவன் வடிவங் கண்ட
சோதியொளிர் மெய்கண்டார் பாதம் போற்றி
நல்லாக மவேதாந்தத் தெளிவை நல்கு
நற்சிவப்பி ரகாசமாநன் னூலைத் தந்த
எல்லோரும் எந்நாளும் ஏந்திப் போற்றும்
எழிற்குரவன் உமாபதியார் பாதம் போற்றி.

02. சிவம்பெருக்குஞ் சிவப்பிரகா சத்தை நாளுஞ்
சிவாநுபூபதிச் செல்வமெனச் சீவர் கொள்ள
உவகையுடன் உரைவல்லார் இருகை யேத்தி
உள்ளத்திற் சிவானந்த வெள்ளங் காணத்
தவம்பெருகத் தமிழ்வளர உரையிற் றந்து
தன்னிகரிற் சிவஞான சித்தி யார்க்கு
நவம்பெருகு நல்லுரையுங் கண்ட சீலன்
நாடுபுகழ் திருவிளங்க நாமம் வாழி.

03. திருவிளங்குஞ் சித்தாந்த சாத்தி ரங்கள்
சிறப்புமிகுந் தோத்திரங்கள் சீர்மை மேவப்
பெருமைபெறு நாவலர்போல் நமக்கு மீவோன்
பேணுகின்ற குணநலங்கள் யாவும் பெற்றேன்
தரும்மிகும் பசுபதியெம் வள்ளல் தந்த
தவத்தோன்றல் சிதம்பரநா தகுரு மைந்தன்
ஒருமையுடன் திருவருள்சேர் தொண்டு செய்யும்
ஒளிவளருஞ் சிவகுருநாத மணி வாழி.

04. திருவளருஞ் சிவானந்த வின்ப மேவச்
சித்தாந்தத் திருமரபு செழித்து வாழ
உருவமெலாஞ் சிவனுருவா யுலகிற்றோன்ற
வுள்ளமெலாஞ் சிவப்பிரகாச சவெள்ளம் பாயக்
கருமமெலாங் கடவுளடித் தொண்டே காணுங்
கருதரிய கூட்டுறவுக் கழகக் கண்ட
அருமைமிகும் அரனடியார் அன்புத் தொண்டால்
அவனியெலாம் அரனருள் சேர் ஞானங் கண்டோம்.

பங்குனி உத்தரம்
05-04-74

உ
சிவமயம்

# சேக்கிழார் விழாக் கவியரங்கக் கவிதைகள்

**கவிஞர் :**
**வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை B.A**

ஐங்கரனைக் கைகூப்பி யேத்தி நனிவணங்கி
உங்கட் குரைப்ப னுரை.

பெரியரிற் பெரியனைப் பெரியபுரா ணந்தந்த
அரியரில் அரியனை அரவனைப் போற்றுதுமே (1)

அடியருக் கடியனை அருள்மொழி யானவனைப்
படியினில் வீழ்ந்தவன் பத்திநெறி பாடுவனே (2)

அந்நாளில் அரங்கேறிக் கவிதை சிந்த
அரசொருவன் அவைமீதங் கிவர்த்தி ருப்பன்
இந்நாளில் இலைவேந்தர் என்ப தாலே
இன்கவியோ காவியமோ இலையென் பார்க்குப்
பொன்னாளாம் இந்நாளில் புலவரெமை யேற்றிப்
புரப்பதற்கோர் வேந்தனையு மிங்கே யீந்த
தன்னாமம் எந்நாளும் தரணி போற்றும்
தவக்கவிஞன் சேக்கிழான்றன் மன்றம் வாழ்க (3)

கையினிற் தெய்வ நூல்கள்!
கழுத்தினில் உருத்திராக்கம்!
மெய்யினில் நீற்று வெள்ளம் !
மேன்மை கொள் சைவஉள்ளம் !
பொய்ம்மையைக் காயும் எண்ணம் !
புகலரும் திருவின் கோலம் !
செய்கையிற் சிவமே யானார்
சேக்கிழா ரென்றே சொல்வர். (4)

செப்புபுகழ்ச் சேக்கிழாரே ! செகம்பரவு மாக்கவிஞ!
எப்படிநீ பாடினாயென்? றெனக்குரைக்க வேண்டுமின்று
தப்புதற்கிங் கிடமில்லை ! தாளாத பெருங்கூட்டம் !
அற்புதம்நீ பாடியது ! ஆனாலுண் டையமதில் ! (5)

மன்னவர்க்கு மந்திரியா யிருந்தா யென்றால்
மற்றோரை யேன்புகழ்ந்தாய்? மறதி தானோ?
வன்மைமிகு வேடனையுங் காடனையும் வணங்கி
வண்ணமிலாப் பேயாரை வாழ்த்தி நின்றாய்
எண்ணமிலா தரனளித்த உலகெலா மென்சொலால்
எல்லையிலா தடியார்க்கே யடியா ரானாய்!
தொல்லைமிகு மிவ்வழியை என்மேற் கொண்டாய்?
தோன்றலே ! எம் தொண்டர்தம் குலதனமே ! சொல். (6)

என்றாலும் இன்னுமொன்று, ஏங்காதே ! கேட்கின்றேன்
குன்றத்தூர்க் கோகிலமே ! கோபுரஞ்சூழ் குன்றமே
மன்றாடு மாமணியே ! மரகதமே ! வாய்திறவாய்
நன்றாகச் சொல்லிடுக ! நாடறியக் கேட்பதனை. (7)

உலகெல்லா மெனவெங்கள் ஊர்திரி பித்தன்
உன்மத்த னுரைத்தசொல் லுவந்து கேட்டே
நலமிகுந்த நல்லமைச்சர் பதவி நீத்தாய் !
நாணமிலா தென்செய்தாய்? பின்னும் ஐய,
புலைமையிலாக் கணமென்னும் புலவர்ப் போற்றிப்
புலையரையும் புகழ்ந்தாயே ! இன்று னக்குக்
கலகலெனக் கவியரங்கும் வேண்டு மோ? சொல்
கருத்தரங்குங் கண்டாயுன் காட்சி யென்னே ! (8)

"பத்தியினாற் பரனடியைப் பாடினேன்;
பாரறியப் பழவினையை வீடினேன் ;
சித்தமெலாங் குடிகொண்ட எம்சிவனைச்
சீவரெலாங் கண்டேன்" என்று
மெத்தவுமே மேலான விடைதந்தீர் ;
மேதினியை விளக்கும் நல்ல
சத்தான புராணநூ லுமீந்தீர்
சரணம்யான் உங்கட் கைய! (9)

உங்கட்கு மாத்திரமா? ஊரறியப் பேரறியப்
பங்கமிலா விழாவெடுத்த பரனடியார் பல்லோர்க்கும்
இங்கு வந்திவர்ந்திருக்கும் இளையோர்க்கும் முதியோர்க்கும்
அங்கவரிற் சிவங்காணில் அவர்யார்க்கும் யானடியேன்.

♓ ♓ ♓

"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள" என்றும்,
"முன்னவர்வந் தெதிர்தோன்று முருகனோ! என்றும்,
'செங்கயல் குழைகணாடுந் திருமுனைப்பாடி" என்றும்
'செந்தமிழத் திறமுரைத்த சேக்கிழான் திறமுரைப்பாம். (10)

வேதநெறி தழைக்கவந்த விறல்ஞானக் குழவியினை
ஆதனூர்ப் புலையரை அருணாவுக் கரசரை
நாதனருட் டாமறவா நம்பியா ரூரரைக்
கீதமிகப் பாடுமெங் கிளிமொழி காரைக்காலை. (11)

சீதவளஞ் சேர்திங்க ளூரப்பூ தியடிகளைத்
தாதையைத் தாளறுத்த சண்டியைச் சாக்கியரைக்
காதல்சேர் கண்ணப்பர் கலையரைப் பாடுமெம்
மாதசஞ்சேர் சேக்கிழார் மலரடியெம் மணிமுடி (12)

♓ ♓ ♓

சேக்கிழார் தந்தபெரு நூலெம்
செகத்திற் கேற்ற திருநூலாம்
வாக்கினி லின்பப் புதையலதே
வையத்தில் இன்பக் கவியமுதம்.

ஆதனூர்ப் புலைய ராடிடுவார் ;
ஆனாய ரைந்தெழுத் தோதிடுவர்;
அருமையாய்ப் பிடித்த பொன்மீனை
அதிபத்தர் அரனுக் கேவிடுவர்.

மனைவியைத் தீண்டார் திருநீலர்;
மயிர்வினை செய்வார் மற்றொருவர்;
முனையாடி வந்தபெரும் பொருளை
முன்னரே ஈவார் முனையடுவார்.

கல்லா லெறிவான் ஒருபக்தன்
கையைத் தடிவான் கழற்சிங்கன்;
சொல்லாற் துதிப்பர் பலபேர்கள்
சொல்லின் சுவையை அதிற் காண்போம்.

அடியாரை வணங்கித் துதித்தேநல்
லரனடி அடைவர் பலதொண்டர்
குடிகளை மன்னன் வணங்கிடு நற்
குவலயப் புதுமை கண்டிடுவோம்.

உள்ள மெங்கும் உணர்வூற
உயிர்க ளின்பக் கவிபாட
'வெள்ளைவா ரணம்' வந்து நிற்க
விண்வெளி செல்வா ஆரூரா

தேவாரம் பண்ணோ டிசைபாடும் ;
திருமூல மந்திரம் அசைபோடும் ;
நாவாரப் பாடி நாமுய்வோம்
நலங்கள் பெறுவோம் என்றென்றும்.

பெண்மையைப் போற்றும் பெருநூலைப்
பேரறங் காட்டும் திருநூலைத்
திண்மையைக் கூட்டும் சிவநூலைத்
திருத்தொண்டர் புராண மெனுநூலை

பக்திச் சுவைக்கோர் தனிநூலைப்
பாடிமடியர் புகழ் நூலைத்
திக்கெலாம் புகழும் திருநூலை
சேக்கிழார் தந்தார் ஒருநூலாய் (13)

---

சிறப்புச் சொற்பொழிவாளர் பேராசிரியர் வெள்ளைவாரணனார் சபையிற் புகுந்தபொழுது பாடப்பட்ட பா.

தமிழ் மக்கள் தண்ணளியைத் தவப்பணியை வரலாற்றை
அமுதூறும் அருந்தமிழில் அரனடியார் அன்புமுறக்
குமிழ்தனஞ்சேர் உமைபாகன் குலவுபுகழ்ச் சேக்கிழானெம்
இமிழ் கடல்சூழ உலகத்தின் இருநிதியா யமைந்திடுவன். (14)

அன்பூட்டும் ! அருள்கூட்டும் ! அறந்தான் நாட்டும் !
அரசியலோ டறிவிய லனைத்தும் ஊட்டும் !
இன்பூட்டும் ! இறையூட்டும்! அருளைக் காட்டி
இறவாத பேரின்பம் ஊட்டும் கண்டீர்!
நண்பூட்டி நலமூட்டி யகந்தை தன்னை
நாடறிய நமதுளத்தில் நலியச் செய்து
தென்பூட்டுஞ் சேக்கிழார் திருத்தொண் டீந்த
திருமருவு புகழ்பரவு திருநூல் ஓதின். (15)

இருபத்து நான்குமணி தியான மிருப்பினுங்
குருபத்தி யில்லார்க்குக் குவலயமிங் கில்லையென்றே
அறுபத்து மூவருந் தமிழீந்த அருள்மொழியை
அறுபத்து நான்கானா னென்றறையும் அவனியே, (16)

உலகெலாம் தெய்வநெறி உயர்வு கொள்ள,
உள்ளத்தி லன்பு வழி அரசு செய்யப்
பலசுவைசேர் பாவீந்து, பத்தி சொட்டப்;
பன்னரிய பரனடியார் பாதம் பாடுங்
கலைமலிசேர் சேக்கிழானின் கவிதை தோய்ந்து,
கடவுளடி கவிதோறுங் கண்டு, தெய்வ
நிலையுணர்ந்து, அடியாரை வாழ்த்தி, யேத்தி,
நிமலனருள் நீடுலகில் நிலவக் காண்போம். (17)

செய்யதமிழ் உய்யவந்த மெய்யன் ஐயன்
செகம்பரவு சேக்கிழான் சேவடிகள் வாழ்க!
ஐயமின்றி உய்யுநெறி அளித்த அப்பர்
ஆரூரர் சம்பந்தர் அடித்தாள் வாழ்க!
தெய்வநெறி சைவமறை உய்ய வென்று
தேசுலவு மன்றுகண்ட திறலோர் வாழ்க!
தையலுமை பாகனைத் தீசன் தாள்கள்
தலைமேற்கொண் டித்தரணி யெல்லாம் வாழ்க.

செய்யதமி ழிங்கிருக்கத், தேனிருக்கப் பாலிருக்க,
உய்யுநெறி யீந்துவக்கும் உயர்புராண முயிருக்கக்
கையதனில் நெய்போன்ற கவிஞரரு, கிங்கிருக்கப்
பையலென்றன் பயனில்சொல் கேட்டீரே! என் வணக்கம்.

* * * * * * * * * *

# பாராட்டு வாழ்த்துப்பா

சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற கண்டாவளைக் கவிஞர் சி. இராசையா அவர்கள் எழுதிய கந்தகோட்டமான்மியம் நூலுக்கு மெய்கண்டார் ஆதீன குரு முதல்வர் மகா வித்துவான் சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை **B.A** வழங்கிய **பாராட்டு வாழ்த்துப்பா.**

கவியரசர் கச்சியப்பர் கந்தபுராணம் தந்ததுபோல்
புவியரசர் போற்றுகின்ற புலவர்மணி இராசையா
குவிகின்ற கரங்களினால் குமரவேள் காதைதனைச்
செவிகளெலாம் களிகொள்ளத் திருமுறையாய்த் தந்தனனே.

கந்தகோட்ட புராணமெனும் கந்தகோட்ட மான்மியத்தைச்
சிந்தையெலாம் சிவமயமாய்ச் சீவரெலாம் சிறப்புறவே
தந்தைசித்தர் குமாரவேலு தந்தமகன் இராசையவேள்
சொந்தமதாய் எமக்களித்தான் சுகம்பெற்று வாழ்வோமே.

பாவினிலே தேன்சொட்டப் பால் அமிழ்தம் தந்ததுபோல்
தேவியர்தம் மோடென்றும் திருவருளைப் புரிகின்ற
ஓவியத்திற் கெட்டாத உணர்வரிய திருமுருகன்
காவியத்தைச் செய்தளித்தான் கண்டாவளைக் கவிஞரேறே.

பரவுபுகழ் அறிஞரெலாம் பல்லாண்டு ஓதுதற்கு
முரசுமோட்டை வாழ்கின்ற முருகவேளின் புராணத்தை
அரசு செய்த கிராம சேவை அதிகாரி இராசையா
சரசுவதி நல்லருளால் தமிழ்த்தாய்க்கு ஈந்தனனே.

கந்தகோட்ட மான்மியத்தைக் காதாலே கேட்டால் நம்
சொந்தவினை போயகலும் சுகவாழ்வு மிக்குவரும்
எந்தமுளம் களிகொள்ளும் இருளெல்லாம் ஒளியாகும்
செந்தமிழின் திறங்காட்டும் சீர்புராணம் வாழியவே

தேசிகத்தோ டென்றும் நற் திருமுறைகள் பலவோதிக்
காசிவாசி எனவேநற் கனிந்ததலம் பல வாழ்ந்து
ஆசிபெற்ற நற்புலவன் அறிஞர்க்கோர் அருமருந்து
தேசுநிறை அன்புநெறி தேர்புராணம் தந்தனனே

முருகவேள் புராணத்தை முனிவருமே போற்றிடுவர்
அருமைமிகு தமிழன்னை ஆவலுடன் அரவணைப்பள்
பெருமைமிகு சேக்கிழாரின் பெரியநற்பு ராணம் போல்
திருமறையாய்ப் போற்றிடுவோம் திருவருளைப் பெற்றிடுவோம்

"வணக்கம்"

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# காஞ்சி மெய்கண்டார் ஆதீன வாழ்த்துப்பா

## பரமாசாரிய சுவாமிகள் அருளியது

அன்பரே இன்ப வாழ்வே அணைவுற நன்கு வாழ்க
முன்பது தெரிந்தால் இந்த முறையில் நீர் எழுதக் காணோம்
பின்பதைக் கடிதம் தூண்டப் பிழையென நோக்கி நொந்தோம்
என்பதை யுணர்த்த ஈதின் றெழுதினோம் நம்பி வாழ்க.

கட்டுரை முற்றும் காட்டக் கண்டெழுதுவதே வேண்டும்
நட்டுளர் திறத்தில் அன்ன நாட்டமில்லாமை குற்றப்
பட்டுல குன்ன எண்ணம் பரிந்துரை கொடுத்து விட்டோம்
கெட்டுவிட்டதனை நன்று கெழுமுறச் செய்யொணாதே

திருவளர் கணபதிக்குச் செல்வமும் சிறப்பும் ஆர்க
மருவளர் குழலி நீங்கா மாசிலா மணிதாள் போற்றிக்
கருவளர் தீங்கு நீங்கிக் கலந்தொருமைக்காளாகிக்
குருவளர் கழலி னீழல் குறித்து நீடுழி வாழ்க.

தப்பினைக் காட்டி யன்பு
    ததும்புரை காட்டி உள்ளத்
தொப்பினைக் காட்டி நோகும்
    உணர்வினைக் கண்டு நெஞ்சம்
வெப்பற விளக்கி இன்பம்
    மேவுறக் கணபதிக்குத்
திப்பிய சிந்தை மல்கச்
    சிவனருள் கூட்டும் நன்றே.

*வாழ்க பிள்ளையார். சிவம்*

## வாழ்த்துரை

சித்தாந்த சாத்திரத்தின் சிகர மாகும்
சிறப்புமிகு சிவஞான போத மெய்ந்நூல்
முற்றாக எம்மனோர்க்குங் கிடைக்கும் வண்ணம்
முன்னின்று வெளியிட்ட தெய்வத் தொண்டு
சத்தான சிவதொண்டே இதனைச் செய்த
சால்புமிகு செட்டியார்நற் பதிப்ப கத்தை
வைத்தாளும் திருமரபை வாழ்த்து கின்றோம்
வணங்குகின்றோம் வையகமும் நன்றே வாழ்க.

சிவன் அடியார்க்கு அடியவன்
சித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை

உ

கருணை பொழி கமலமுகமாறு மிந்துவந்

தொடை மகுடமுடியு மொளிர் நூபு ரஞ்சரண்

கலகலென மயிலின்மிசை யேறி வந்துகந் - தெனையாள்வாய்

---

க. ஷண்முகரத்நசர்மா
சமாதான நீதவான்

ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி கோவில்
பறாளை
சுழிபுரம்
08.07.1980

பேரன்புக்குரியவருக்கு
என்மனமார்ந்த வாழ்த்துரை

யாழ்ப்பணத்து மேல்பகுதி சுழிபுரத்தில் நல்ல உத்தம சைவ வேளான் பரம்பரையில் தோன்றியவர் திருவாளர் கந்தசாமி அவர்கள். அவர் மிகமெலிந்த, சிறிய ஒரு ஆண்பிள்ளையைக் கொண்டுவந்து சேர்த்தார் படிப்பதற்காக. அப்பிள்ளையின் சிரித்த முகம் என்னை மிகவும் கவர்ந்தது. அவர் மாணவர் சமாஜங்களில் அழகாகப் பேசுவார். பறாளை முருகன் திருவிழாக்காலங்களில் தேவாரம், திருப்புகழ், பஜனைகளில் இனிமையாகப் பாடுவார். அவரின் திறமை மேலும் மேலும் ஆசிரியர்கள் கவனத்தை அவர் பால் ஈர்த்தது. 1938ம் ஆண்டில் வலி மேற்கு ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டியில் பங்குபற்ற வைத்தோம். அவர் பெற்ற முதற்பரிசு எங்களையும் பாடசாலையையும் பேரானந்தமும் பெருமையும் பெற வைத்தது. தந்தையர் மறைவு காரணமாக அவர் எங்களுரை விட்டுப்பிரிந்து சில ஆண்டுகளாயின.

பின் ஒரு நாள் யாழ் நகர வீதியில் இவரைக் கண்டேன். தூய வெண்ணிற ஆடைகள், விபூதிக்குறி, சந்தனப்பொட்டு, அழகிய சைவ வாலிப ஆசிரியர், பணிவும் பண்பும் அடையாளம் காட்ட அளவிடற்கரிய ஆனந்தமும் பெருமையும் அடைந்தேன். எனது ஆசிரியத் தொழிலும் பயனடைந்தது என நிம்மதியுற்றேன். இவர் தான் இப்போதைய சைவ உலகின் உச்சியிற் பிரகாசிக்கும்.

சித்தாந்த கலாநிதி கந்தசாமி கணபதிப்பிள்ளை, B.A அவர்கள். இவர்களின் சைவப் பணியை இன்று இலங்கை முழுதுமறியும். சொந்த ஊரை மறவாது விரிவுரைகள் செய்தும், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பள்ளுப்பாடிய பறாளை விநாயகர் முதலாய மூர்த்திகள் பேரில் திருவூஞ்சற்பாக்கள் பாடியும் மகிழ்வித்துள்ளார்கள்.

இவர்கள் இந்தச் சைவ நற்பணிகளைப் பல்லாண்டு தொடர்ந்து செய்துவர செந்தமிழ்க் குமரன் அருள்புரிவாராக.

இங்ஙனம்

க. ஷண்முகரத்நசர்மா

මගේ අංකය
எமது இல
My Number

තැ. පෙ.අ.කය 57,
තිරුනෙල්වෙලි
යාපනයග

යාපනය විශ්වවිද්‍යාලය ශ්‍රී ලංකාව.

உமது இல **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
Your Number

த.பெ.எண் 57
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

දුරකතනය යාපනය 22481
தொலைபண்ணி யாழ்ப்பாணம்
Telephone Jaffna.23626

P.O.Box 57
Thirunelvely
JAFFNA.
08.03.91

சித்தாந்த கலாநிதி சித்தாந்த சரபம்
மகாவித்துவான் க.கணபதிப்பிள்ளை பி.எ
கௌரவ இயக்குநர், சித்தாந்த
சைவ இயக்குநர், சித்தாந்த
சைவ பாதுகாப்புச் சேவை,
55/44, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

**அன்புடையீர்,**

தங்கள் 1991.03.05 ஆம் திகதிக் கடிதம் கிடைத்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறைக்குப் பேராசிரியர் ஒருவரை நியமிக்கும் பொருட்டு விளம்பரம் செய்யப்பட்டபொழுது தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கவில்லை. அதனால் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்ய முடியவில்லை.

திருமுறைப் பண்ணிசை தொடர்பாக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

இந்து கலாச்சாரப் பெயர் மாற்றம் பற்றிய விடயம் கலைப்பீடத்தின் ஆலோசனையுடன் முடிவு செய்யப்படும்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள,
பேராசிரியர், அ.துரைராசா

යාපනය විශ්වවිද්‍යාලය ශ්‍රී ලංකාව. තිරුනෙල්වෙලි
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை யාපනය

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

**Prof.K.Kunaratnam**
B.Sc. (Cey.) Ph.D, (Ltd.).
D.I.C.(Land).
Vice - Chancellor
Telephone : 0252834

Thirunelvely
JAFFNA.
Sri Lanka

1995.04.19

சிவத்திரு சித்தாந்த சரப ஞானப்பிரகாச சிவம்,
குருதொண்டு செய் முதல்வர்,
மெய்கண்ட தேவர் ஆதீனம்,
55/44 கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

பேரன்புடைய குருதொண்டுசெய் முதல்வர் அவர்களுக்கு

வணக்கம்

**<u>யாழ் பல்கலைக்கழகத்திற் சைவசமயநெறி</u>**

தங்களது 1995.03.15 திகதியிட்ட கடிதம் தொடர்பாக எமது பல்கலைக்கழகத்தில் கிடைக்கப்பெறும் அனைத்து வளங்களையும் பயன்படுத்திச் சைவசமய நெறிதொடர்பான போதனைக்கு உரிய இடம் வழங்கப்பட்டு வருகின்றதென்பதை முதற்கண் குறிப்பிட விரும்புகிறேன். யாழ் பல்கலைக்கழகம் வளாகமாகத் தொடங்கப் பெற்ற காலம் முதல் இந்துநாகரிகத் துறையில் பட்டதாரி மாணவர்களுக்குரிய பாடநெறியில் சைவசமய நெறிக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பட்டப்பின் ஆராய்ச்சியிலும் அந்நெறிக்குரிய இடம் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் இந்துநாகரிகத்துறை, மெய்யியற்துறை ஆகிய இரு துறைகளிலும் முறையே சமய தத்துவ பின்னணிகளில் சைவசித்தாந்தம் சார்பாக போதனைகள் இடம்பெறுகின்றன. உயர்நிலை ஆராய்ச்சியிலும் அவை முக்கியத்துவம் பெறுகின்றன.

பல்கலைக் கழக கலைப்பீட ஆய்வரங்கிலும் சைவசமயநெறி, சைவசித்தாந்தம் சார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் அவ்வப்போது பெரும்பாலோரது நன்மை கருதி இடம் பெறுகின்றன.

பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்பு அலகின் ஊடாக வெளியார்களுக்கும் சைவநெறி சார்ந்த தேவையான அடிப்படைப் போதனைகள் வழங்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக. "சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்" என்ற விடயத்தில் சைவப் பெரியார்களினதும் அறிஞர்களினதும் உதவியுடன் தொடர் விரிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சைவப் பெரியார் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் சைவநெறிசார்ந்த மாணவர்கள் வழிபாடு சாதனை ஆகிய துறைகளில் மேன்மையடைய வேண்டும் என்ற உயர்நோக்கில் உருவாக்கிய ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் சைவ மாணவர்கள் ஆர்வத்துடன் சமய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் சிறப்பாக இங்கு குறிப்பிட வேண்டும்.

சைவ சமய செயற்பாடுகளிலும் அறிவிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் புலமைப்பரிசில் வழங்கும் ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தில் கிடைக்கும் வளங்களையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி சைவநெறி சார்ந்த போதனைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

மேலும் சைவசித்தாந்த அறக்கொடை பேராசிரியர் பதவிக்கு தகுதியான ஒருவர் நியமிக்கப்படுமிடத்து, சைவசித்தாந்தம் தொடர்பான கல்விநெறியும், ஆராய்ச்சியும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இப்படிக்கு
தங்களன்புள்ள
க. குணரத்தினம்
துணைவேந்தர்

**பிரதிகள் :-** கலைப்பீடாதிபதி
தலைவர், இந்துநாகரிகத்துறை

உ

சிவமயம்



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

---

A.Sivaloganatha Kurukkal
Nagathampiran Kovil
Puliyampokkanai
Paranthan

03.04.2002
நாகதம்பிரான்
ஆலயம்
புளியம் பொக்கனை

என்றும் என் அன்பின் ஞானப்பிரகாசம் அவர்கள் அறிவது. நான் நலம் தங்கள் நலம் நாடி எனது மாடல்.

மேலும் உங்கள் நடை, உடை, பாவனை, பேச்சு இவைதான் என் கண்ணுக்குள் இப்பொழுதும் இருக்கின்றது. உங்களைப் போலவே நானும் வரவேணும் என்பதுதான் என் விருப்பம். வயது கூடிய வேளையிலும் இளமை உணர்வு உங்களுக்கு ஆண்டவன் கொடுத்தது.

நீங்கள் யான் எதிர்பாராமல் வந்தபோது வயதால் மிகவும் சிறியவனுக்கு செய்த வரவேற்பும் பாராட்டும் என்றும் என்னை விட்டகலாது. இனிப் பாதைப் பிரச்சனை இல்லை. வசதி வருகின்றபோது என்னையும் தம்பிரானையும் எட்டிப் பாருங்கள். நீங்கள் செய்த இப்பெரும் உபசாரத்தை யான் என்றும் மறக்கவே மாட்டேன். உங்கள் உடல் நலத்தைக் கவனித்து இன்னும் பல காலம் சமயத்துக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று கூறி ஆண்டவனைத் தொழுது நிறைவு செய்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு
அ.சிவலோகநாதக் குருக்கள்

## சைவ சித்தாந்த வழிபாட்டுப் பயிற்சி நெறி

திருவருள் மயமானது இவ்வுலகம். திருவருளை அறிந்து பேரின்பம் பெறுவதற்கு ஆணவ இருளாகிய மருள் நமக்குப் பலவாறு தடையாகவுளது. அருளைப் பற்றுக் கோடாகக் கொள்ள இருள் தானாகவே விலகும். அருளைப் பெறுதற்கு மூன்று வழிகள் உள. குரு, லிங்க, சங்கம வழிபாடுகளே அவை. சங்கமம் அடியார் கூட்டம்.

இவ்வுலக வாழ்க்கையை பேரின்ப மயமாக்க இவை உதவுகின்றன. சகலராகிய எமக்கு இம்மூன்றுமே அத்தியாவசியமாகும். இம் மூன்று வழிபாடுகளுக்கும் ஏற்ற இடமாக இன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் விளங்குகின்றது.

நாவலர் பெருமான் முதலிய சான்றோரைக் கண்ட இந்நாடு தனக்கென ஓர் ஆதீனம் இல்லையே எனப் பல்லாண்டுகளாகத் தவஞ் செய்தது. அதன் பெறுபேறாகச் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளை ஆதீன கர்த்தராகக் கொண்டு திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பெயரில் மதுரையிலுள்ளது போல நல்லையிலும் ஏற்பட்டுள்ளது. ஆதீனமும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளும் ஆற்றிவரும் பணிகள் பற்பல. யாவரும் அறிந்தவை. அவற்றுள் தலைசிறந்தவொன்றாக ஆதீன மகாவித்துவான் சித்தாந்த சரபம் சித்தாந்தச் செல்வர் சித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை பி.ஏ. அவர்கள் பொறுப்பில் கடந்த ஈராண்டுகளாக நடைபெற்று வந்த சைவசித்தாந்த வழிபாட்டுப் பயிற்சி நெறி விளங்குகின்றது.

இப்பயிற்சி நெறியில் சைவ சமயம் தமிழ்மொழி பற்றிய விடயங்கள் யாவும் திருவருள் மயமான வழிபாட்டு மூலம் ஆராயப் பெற்றன. இலக்கண இலக்கியம் தருக்கம் முதலியவற்றிலே சிறந்த புலமையுடையவர்கட்கே பெரிதும் மலைப்பினை ஏற்படுத்தும். சிவஞான மாபாடியம் முதலியவை எல்லோர்க்கும் புலப்படும் வகையில் வழிபாட்டு நெறி மூலம் சிந்திக்கப் பெற்றன.

சீவன் முத்தர்கள் எனப் போற்றப்படத்தக்க சைவச் சான்றோர்கள், பட்டதாரிகள், பண்டிதர்கள், சைவப்புலவர்கள், ஆசிரியர்கள், அரசாங்கத்தில் உயர் பதவி வகித்த சைவப் பெரியோர்கள் ஆகியவர்கள் இவ்வழிபாட்டுப் பயிற்சி நெறியிலே பங்கு கொண்டார்கள். வாரத்திற்கு ஒரு நாள் தொடர்ந்து நான்கு மணித்தியாலம் இரு வருடங்களாக அப்பயிற்சிநெறி நடைபெற்றது. சிவஞான போதச் சிற்றுரை, பேருரை இரண்டும் எழுத்தெழுத்தாக ஆராயப் பெற்றன. அறிவு வழிச் செல்லாது அருள் வழிச் சென்றதனலேயே இப்பணி நின்றவேறிற்று வட மொழியும் தென்றமிழும் நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவர் சிவஞான போதமருளிய மெய்கண்ட தேவர், தேவாரமருளிச் செய்த ஞான சம்பந்தர் முதலியோரின் திருவடிகளை கசிந்துருகி வணங்கியமையாலேயே இப்பணி சிறப்புற்றது.

**இது வீரகேசரி** **1974 வெளியீடு**

சைவநீதி 25 – 10 – 1999 இதழில் வெளிவந்தது

# இலங்கை மெய்கண்டார் ஆதீன இரண்டாங் குரு முதல்வரும் ஆதீன மீள்தாபகரும்


இ.நகுலேஸ்வரராசா
(வவுனியா வடக்கு சைவ சமய பாட ஆசிரியரும் ஆதீன வெளியீட்டு பிரதம ஆசிரியரும்)




இலங்கை மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் 1990 சித்திரை பரணியில் சமாதிப் பேறடைந்தார். அன்னாரின் தீபபூசையன்று வைத்திய கலாநிதி முருகவேள் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் ஆதீனத்தின் எதிர்காலம் பற்றி நிர்ணயம் செய்ய ஆலோசனைக் கூட்டம் நடந்தது. ஆதீனக் குருமுதல்வரை நியமித்து ஆவன செய்யும் பொறுப்பு அதன் அமைப்பாளராக இருந்து செயற்பட்ட வித்துவான் செல்லையா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆதீனத்துக்குத் தகுந்த ஒரு குருமுதல்வரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் இரு வருடங்கள் கழிந்தன. அதுவரை ஆதீனப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. ஆதீனமும் செயல் இழந்து விட்டது. வித்துவான் அவர்களின் அயரா முயற்சியின் பயனாக அவருடன் சைவ ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற சகபாடி சைவசித்தாந்த கலாநிதி திரு.க.கணபதிப்பிள்ளை வாய்க்கப் பெற்றார். அவர் சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறி ஆசிரியப் பணியை மேற்கொண்டவர். பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணி (B.A) பட்டம் பெற்றார். பின்னர் இந்திய பேரறிஞர் துணைக் கொண்டு சைவசித்த சாஸ்திரங்களில் பயிற்சியும் பெற்றார். அதில் மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு இந்தியாவில் சைவசித்தாந்த கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றார். நல்லை ஆதீனத்தின் தலைமைப் புலவராகி மகாவித்துவான் பட்டமும் பெற்று அவ்வாதீனத்திலேயே சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஞான போதனையாகவும் நடாத்தினார். அவரின் சைவ சித்தாந்த வகுப்பில் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலிருந்தும் வந்து பெருந் தொகையானோர் பாடங் கேட்டு சாஸ்திர அறிவையும் பெற்றனர்.

யாழ்ப்பாணத்தின் முதியவர், இளைஞர் எனப்பலர் அவர் மாணவர்களாகினர். அவர் ஓய்வு பெற்றதும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் சைவசித்தாந்த வகுப்புக்களை ஆரம்பித்து நடாத்தி வந்தார். அதில் துணையாசிரியராகச் சைவப்புலவர் திரு.மு.திருஞானசம்பந்தப்பிள்ளையையும் நியமித்தார். இக்காலத்திலேதான் வித்துவான் செல்லையா அவர்களின் நாட்டம் சைவ சித்தாந்த கலாநிதி அவர்களின் மேல் வைக்கப்பட்டது. அவர் நடாத்திய வகுப்புக்களில் தானுங் கலந்து அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மாணவர்கள் மூலமும் தூண்டுதல் விடுவித்தார். சம்மதம் கொடுக்க மறுத்து விட்டார். தனக்கு இவ் வகுப்புடன் சைவப் பாதுகாப்புச் சபை ஒன்றின் சேவையுமுண்டு. சைவசித்தாந்த சாஸ்திரத்தில் மேலும் ஆய்வுகள் உண்டு என்று கூறி ஆதீனப் பொறுப்பை ஏற்க முடியாதென்றே கூறிவிட்டார்கள். வித்துவானும் தன் முயற்சியில் தளரவில்லை. அயராது முயன்று வந்தார். "கரைப்பவர் கரைத்தால் கல்லுங்கரையு மன்றோ" மீண்டும் மீண்டும் வகுப்பில் கலந்து ஒரு நாள் வகுப்பில் 5 நிமிடம் ஒதுக்கித் தரவேண்டு மென்று ஒரு சிறு வேண்டுகோள் செய்து சொற்பொழிவை ஆற்றினார். அவரின் உருவகமான வேண்டுகோளில் மாணவர்களும் ஈடுபாடு கொண்டு நல்ல பணிக்கு உதவும் படி தம் குருவை வேண்டி நின்றனர். குருவும் இணங்கினார். ஆதீனத்துக்கும் நல்ல ஒரு குரு முதல்வர் வாய்க்கப் பெற்றார்.

ஒரு நல்ல சுபவேளையில் கஸ்தூரியார் வீதி ஆலயத்தில் பூசை வழிபாட்டுடன் ஆதீன சம்பிரதாயப்படி பரமாச்சாரியாராகப் பட்டம் சூட்டப் பட்டார். யாழ்ப்பாணத்தில் மெய்கண்டார் ஆதீனப் பணி மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குருமுதல்வர் ஆணைப்படி வித்துவான் செல்லையா அவர்கள் மெய்கண்டார் ஆதீன மீள்தாபராக ஆக்கப்பட்டார். குருமுதல்வர் அருளுரையையும் ஆரம்பித்தார். ஆலயங்களிலும் சைவச் சபைகளிலும் அவர்களின் அருளுரை பிரபல்யமாகியது. அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சைவசித்தாந்த சாத்திர போதனைகளை புற நிலைக்கற்கை நெறியாக்கி வகுப்புக்களை நடாத்தி வந்தது. அதில் ஆதீனத்தின் சார்பாக அழைக்கப்பட்டு அவ்வகுப்புக்குத் தலைமை தாங்கி அருளுரையாற்றினார்கள். இங்ஙனமாக ஆதீனம் செயற்பட்டு வருங்காலத்து யாழ்ப்பாண மக்களின் இடம் பெயர்வும் நிகழ்ந்தது. யாவரும் தங்கள் இஷ்டப்படியே இடம் தேடிச் செல்லக் குருமுதல்வர் கொழும்புக்குச் செல்ல வித்துவான் செல்லையா வவுனியாவுக்கு வந்து சேர்ந்தார்.

வவுனியாவில் அங்குள்ள சைவத் தாபனங்களின் அழைப்பை ஏற்றுச் சமயப் பணிகளில் வித்துவான் செல்லையா அவர்கள் இணைந்து கொண்டார்கள். இதனைப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்து ஆதீனக் குருமுதல்வர் அத்தாபனங்களூடாக வித்துவான் அவர்களுடன் தொடர்பு கொண்டு கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வந்து சேர்ந்தார். அவரின் மகள், மருமகன்

குடும்பத்துடன் தங்கியிருந்து மீண்டும் வித்துவானுடன் தொடர்பு கொண்டு இங்கு ஆதீனப் பணியை ஆரம்பிக்குமாறு பணித்தார். 1996 ஐப்பசி தீபாவளி நன்நாளிலே மெய்கண்டார் குருபூசையும் ஆதீனக் குரு முதல்வருக்கு வரவேற்பு விழாவும் ஆதி விநாயகர் ஆலயத்தில் அதன் பரிபாலன சபைத் தலைவர் திரு. தில்லைநாதன் (தில்லை) அவர்கள் மூலம் நடாத்தி வைக்க வித்துவான் ஆவன செய்து வைத்தார். வவுனியா மக்களுக்கு அன்று ஆதீனம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை ஆதீனம் பன்முகக்கபடுத்தப்பட்ட சேவைகளை வவுனியாவில் ஆற்றி வருவதை யாவரும் நன்கு அறிவர். சைவாசிரியர்களுக்குச் சமய பாடத்தில் கருத்தரங்குகள் மூலம் பயிற்சியளித்தல், மாணவர்களுக்கு மனனப்போட்டி வைத்துப் பரிசளித்தல், சைவ நூல்களை எழுதி, தொகுத்து வெளியிட்டு மலிவு விலையில் வழங்குதல் மெய்கண்டதேவர், நாவலர், ஆதீன முதலாங்குருமுதல்வர் முதலானவர்களின் குரு பூசைகளை மகேஸ்வர பூசையுடன் நடாத்துதல், சைவச் சேவை புரிந்து வருவோர்களைக் கௌரவித்துச் கௌரப்பட்டம் வழங்குதல். முதியோரின் நலத் திட்டங்களை வகுத்து அவர்களுக்குதவுதல் என்பன ஆதீனப் பணிகளிற் சிலவாம்.

இங்ஙனமாக நன்கு ஆதீனம் சேவையாற்றிவரும்போது இரண்டாங் குரு முதல்வர் உடல்நலக்குறைவால் மீள்தாபகர் வித்துவான் ஆதீன பரிபாலனத் தலைவராக இருந்து எக்குறையும் நேராது செவ்வனே பணியாற்றி வருகிறார். தகுதியான ஒருவரைக் குருமுதல்வராக ஆக்க இங்கும் இந்தியாவிலும் தொடர்பு கொண்டு முயற்சி செய்து வருகிறார். அத்தோடு ஆண்டவன் அருளையும் வேண்டி நிற்கிறார். சைவ நன்மக்களும் இதற்குப் பேருதவிபுரிவார்களாக.

பிரசுரம் : சைவநீதி 1999

உ

உ
சிவமயம்

சிற்சபேசா! சிவசிதம்பரம்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்." (ஸ்ரீலஸ்ரீ நாவலர்)

சைவர்கள் வணங்கும் முழுமுதற் கடவுள் சிவபெருமான், சைவர்கள் முத்தியின்பம் பெறும் பொருட்டு ஓதி, உணர்தற்கு உபகாரமாயுள்ளவை தெய்வத் திருவாளர்களால் திருவாய்மலர்ந்தருளப் பெற்ற திருமுறைகளும், சைவசாத்திரங்களுமேயாம்.

இவற்றைக் காலம், இடம், பொருள், ஏவல்களுக்கேற்ப அவ்வப்போது சிறிது சிறிதாக வெளியிடும் நோக்கங்கொண்ட எளியேம் முதலாவதாகக் கொள்ளப்படும் சிவஞான போதத்தை வெளியிட்டு மகிழ்கிறோம்.

"இந்நூல் இவ்வகையில் வெளிவர இடையறாது ஊக்கமளித்து, அச்சுதாள்களைப் பார்வை செய்து, பாயிரமும் பாடியளித்த சித்தாந்த கலாநிதி வித்துவான் க.கணபதிப்பிள்ளை B.A. அவர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த நன்றி.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

சி. சிவகுருநாதன்
வெளியீட்டாசிரியர்

# தோற்றம்


“சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்,
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிமின்
நன்று தீதென்னும் நாட்டம் விடுமின்
அன்றும் இன்றும் என்றும் ஆன்மா
இருந்தபடியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன்முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்.”

- யோக சுவாமி -


**(தொகுப்பு : செ.ந.ந. நயினை)**

**ஞானபூசை வழிபாட்டிலே பங்குபற்றிய அடியார்களுக்கு குருமுதல்வர் அளிக்கும் முதல்வர் விளக்கம்**









மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் இந்தியாவில் பல சிவதலங்களைத் தரிசித்து தரிசனம் பெற்றுக் கொண்டார்.

பரிபூரண நிலையடைந்த குருவின் நிகழ்ச்சிகளில் நேரடியாகவும், தொலைபேசி, தந்தி, தபால் மூலம் கலந்து கொண்ட எல்லோருக்கும் எங்கள் அன்பான நன்றி பல.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**
**122;3 கெத்தாராம மாவத்தை**
**கொழும்பு - 14**

**க. சிவகுமாரன்**
**மகன்**
**லண்டன்**

# 28.02.2007

K.S.K.Com - 179, Pikerings Road Kotahena Colombo - 13., Tel : 2 438 290